விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 06 புதன்கிழமை (19.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 31

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## கிழக்கில் கடும் மழை பொழிகிறது மீண்டும் வெள்ள அபாய அச்சம்

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் அங்கு மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயநிலை தோன்றியுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த மழை தொடர்ந்தும் பெய்து வருகின்றது. இதனால் பலர் இடம்பெயர்ந் துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் மழையினால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் புகும் அபாயநிலை தோன்றியுள்ளது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிலிருந்து படிப்படியாக வெளியேறி தற் காலிக கூடாரங்களை அமைத்து குடியேறி வருகின் றனர். இந் நிலையில் (14 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தர பரீட்சை இரு கட்டங்களாக நடைபெறும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு விசேடமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் நடாத்துவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.

ஏனைய மாணவர்களுக்கான பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் எனவும், எனினும் பரீட்சை முடிவுகள் ஒரே தினத்திலேயே வெளியிடப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ச)

சுனாமிக்கு உதவி — போருக்கு முஸ்தீபு

# பொருளாதார உதவிகளின் மூலம் இராணுவ பலம் வலுப்பெறுகிறது!

### சர்வதேச சமூகத்துக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் விளக்கம்

(கிளிநொச்சி)

**ஆழிப்பேரலை அனர்த்தத்தையடுத்து இலங்கைக்கு வந்து குவி யும் சர்வதேச உதவிகளை இலங்கை அரசாங்கம் போர் முனைப் புடன் இராணுவக் கட்டமைப்புக்களை பலப்படுத்தவே பயன்படுத்தி வருகின்றதென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தி யுள்ளார்.**

தமிழர் தாயகப் பகுதியில் ஆழிப் பேரலை அனர்த்தம் தொடர்பாக ஆராய் வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் வூட்டர் வில்ரன் மற் றும் நெதர்லாந்துக்கான இலங்கைத் தூது வர் சுசானபிளாங்கட் ஆகியோர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலை மையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இச் சந்திப்பு முற்பகல் 8.15 மணிக்கு புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம் பெற்றது. இதில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனும் கலந்து கொண்டார். சந்திப்பை அடுத்து தகவல் அளிக்கையிலேயே தமிழ்ச்செல்வன் மேற் (14 ஆம் பக்கம் பார்க்க)



## தலை சிதறிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம்!

### மிருசுவிலில் பரபரப்பு:

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் நேற்று முன்தினம் இரவு தலை சிதறிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

மிருசுவில் இராணுவ முகாமுக்கு அரு கிலேயே இச் சடலம் மீட்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலி சாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலை யில் ஒப்படைத்தனர்.

மிருசுவில் பழைய வாய்க்காலைச் சேர்ந்த வைரவன் நடேசு (வயது 50) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வாகனம் ஒன்றுடன் மோதுண்டு அவர் இறந்திருக்கலாம் என பொலிசார் தெரிவித் தனர். (ச-05)

### புனர்வாழ்வு அமைச்சு ந[illegible]டவடிக்கை

## மீட்புபணிக்கு 7 மின்பிறப்பாக்கி யாழ்ப்பாணம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக வாகனங்கள், மின்பிறப்பாக்கிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்திற்கு 7 மின் பிறப்பாக்கிகளும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2 பிக்கப் வாகனங்கள் (14 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மேல் நீதிமன்றில்

## ஆட்கொணர்வு மனு நேற்றும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கைதடியில் காணாமற்போன தம்பன் பாஸ் கரன் என்பவர் தொடர்பாக அவரது மனைவி சகுந்தலாதேவி பாஸ்கரன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை நேற்று யாழ்ப்பா ணம் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் குறித்த காலத்தில் கைதடி (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுக்குள் பூசல் கரு. பதவி விலக முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற் குத் தாம் தயாராகவிருப்பதாக கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை வகுக்கும் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு முடிபை வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி இரு கோணங் களில் அரசியல் நடத்துவதால் தாம் தொடர்ந் தும் அப் பதவியில் இருக்க விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதித் தலைவர் பதவியில் இருந்து கருஜயசூரிய விலகியதன் பின்னர் யாரை அப் பதவிக்கு நியமிக்கவேண்டும் என்பது குறித்து கட்சியின் தலைமையகம் தீவிர மாக ஆராய்ந்து வருவதாக கூறப்படுகின் றது. (க)

# இன்று ஒரு தகவல்

## இயற்கையின் ரகசியம்

உங்களுக்கு எரிச்சல் வரும் வகையில் ஒரு கேள்வி கேட்கட்டுமா? நெல்லிக்காய் ஏன் நெல்லிக்காய் மாதிரி உள்ளது. ஏன் அவரைக்காய் மாதிரி இருக்கக்கூடாது. உங்களுக்குக் கோபம் வருவதற்குள் நானே சொல்லவந்த விடயத்திற்கு வந்து விடுகிறேன்.

இயற்கை இந்த உருவங்களில் சில இரகசியத்தை மறைத்து வைத்திருக்கிறது நமது உடம்பிற்குள் எத்தனையோ உறுப்புக்கள் உள்ளன. நமது உடலுக்குள் உள்ள சில உறுப்புக்களுக்கும் காய், பழங்களின் உருவத்திற்கும் சில ஒற்றுமை உள்ளது. உதாரணத்துக்கு நமது உடம்பில் இதயம் உள்ளது தாமரைமொட்டும் அது மாதிரியே உள்ளது. நமது உடலில் சிறு நீரகம் உள்ளது. அவரை வீதையும் முந்திரிவிதையும் அது போலவே உள்ளன.

இயற்கையில் அமைந்துள்ள இந்த உருவ ஒற்றுமை தற்செயலாக அமைந்ததாக இருக்குமா? இல்லை. இதற்கு ஏதாவது அர்ததம் இருக்குமா? ஆயுர்வேதம் இதைப்பற்றி ஓரளவு ஆராய்ச்சி செய்துள்ளது. அதாவது இந்த உருவ ஒற்றுமை சம்பந்தமாக நமது முன்னோர்கள் கொஞ்சம் ஆராய்ந்துள்ளனர்.

வாதுமையின் உருவம் எப்படிப்பட்டது? மேலே கடினமான ஓடு... உள்ளே அந்த ஓட்டில் ஒட்டாமல் சுளை தனியாக இருககும். நமது தலைக்கும் இந்த அமைப்புக்கும் ஒரு ஒற்றுமை உள்ளது. மனிதனுக்கு மண்டை ஓடு கடினமாக உள்ளது . உள்ளே மூளை மண்டை ஓட்டில் ஒட்டாமல் தனியாக இருக்கிறது. ஒற்றுமை புரிகிறதா?

வாதுமையின் மேல் ஓடுதான் மண்டை ஓடு. அதற்குள்ளே இருக்கும் சுளை தான் மூளை. சரி அதற்கு இப்போது என்ன வந்தது என்று கேட்கிறீர்களா? மத்திய கிழக்கு நாடுகளில் இருப்பவர்களும் ரஷ்யாவின் வடபகுதியில் இருப்பவர்களும் இந்த வாதுமையை எதற்கு உபயோகப்படுத்துகிறார்கள் தெரியுமா? மூளை வளர்ச்சிக்கு டொனிக்காக உபயோகப்படுத்துகிறார்கள்.

அப்படியென்றால் உருவத்தின் ஒற்றுமைக்கும் அதன் உபயோகததிற்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோல் தெரிகிறதல்லவா? அது தான் இயற்கை மறைத்து வைத்திருக்கும் ரகசியமாக இருக்குமோ? அவரை விதை இருக்கிறதல்லவா? **Kid ney** போல்தானே உள்ளது. அமெரிக்காவிலும ஒரு பெரிய அவரை இனம் உள்ளது அதற்குப் பெயரும் **Kidney beans.**

அவரை விதையும் நமது உடலில் உள்ள சிறு நீரகமும் உருவத்தில் ஒரேமாதிரியாக உள்ளது அல்லவா? இப்போது ஆச்சரியம் என்னவென்றால்... சிறுநீரகத்தை சரியாக வேலை செய்யவைப்பதற்கு அவரை விதையிலிருந்து மருந்து தயாரிக்கிறார்கள் அதாவது இந்த அவரைவிதை ஒரு சிறந்த **Diuretic** ஆகப் பயன்படுகிறது அதுமட்டுமல்ல ரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவைக்குறைப்பதற்கு அவரைத் தோடுகள் தான் உபயோகப்படுகிறது.

அது இருக்கட்டும். மனிதனுடைய உயிரணுவை **Sperm** என்று சொல்வார்கள் மைக்ரோஸ் கோப்பின் மூலமாக அதைப் பாக்கலாம். தலை நடுப்பகுதி வால் என மூன்று பகுதி அதிலிருககும். ஆண் பெண் உயிரணுக்கள் ஒன்றுடனொன்று சேர்ந்தவுடன் அந்த **Sprem** இன் நடுப்பகுதியும் வாலும் தனியாகி வீடும். தலைப்பகுதி மட்டும் இருக்கும். மனிதன் என்ற பயிர் உருவாக ஆரம்பவிதை மாதிரி இருக்கும். இது எப்படி இருக்கும் தெரியுமா? என் விதை மாதிரி இருக்கும். நமது முன்னோர்கள் ஆண் பெண் மலட்டுத் தன்மையைப் போக்க இந்த எள்ளைத் தான் கொடுப்பது வழக்கம்.

இதயக்கமலம் என்று சொல்வோம் கமலம் என்றால் தாமரை பூ. அது காலையில் மலரும் மதியம் விரிந்து மாலையில் சுருங்கும. நமது இதயமும் அதே போல் சுருங்கி விரியும். இதயத்தின் நடவடிக்கையும் தாமரையின் நடவடிக்கையும் ஒன்றாக இருக்கிறதல்லவா? இருதய பலவீனத்தைப் போக்குவதற்குத் தாமரைதான் உபயோகப்படுகிறது.

கொய்யாப்பழத்தை தலைகீழாக வைத்துப்பார்த்தால் அதன் உருவமும் கர்ப்பப்பையின் உருவமும் ஒத்து இருக்கும் கருப்பைக் கோளாறுகளை சரி செய்ய கொய்யாப்பழம் தான் உபயோகப்படுகிறது நெல்லிக்காயை கண்ணுக்கு நேராக வைத்துப் பாருங்கள் நடுவில் விதை மூழ்கி இருப்பது போல் தெரியும். நமது கண்ணும் அப்படித்தான். கருவிழிநடுவில் இருக்கும். கண் சம்பந்தமான மருந்துகள் நெல்லிக்காயிலிருந்து தயாராகிறது. அவரை விதை போலவே முந்திரிப் பருப்பில் இருந்தும் சிறு நீரகம் சம்பந்தப்பட்ட மருந்துகளை தயாரிப்பர்.

இதனைால் நான் சொல்வது என்ன வென்றால் நமது உடல் தான் பிரபஞ்சம் இந்த பிரபஞ்சம் தான் நமது உடல் என்ன குழப்புகிறேனா? படைப்பின் இரகசியங்கள் ஏராளம் உண்டு. இது வரை நாம்புரிந்து கொண்டது ஒரு துளிதான். இப்போது நான் உங்களிடம கூறியவற்றை சில நாட்களுக்கு முன் என் நண்பனிடம் சொன்னோன்.அவன் குதர்க்கமாக ஒரு கேள்வி கேட்டான்.

'அவரைக்காய், நெல்லிக்காய், கொய்யாக்காய் என்று சொலகிறாய் அதெல்லாம் சரி பூசணிக்காய் ஏன்பந்து மாதிரி இருக்கிறது? புடலங்காய் ஏன் பாம்பு மாதிரி இருக்கிறது. இப்படியெல்லாம கேட்க ஆரம்பித்து விட்டான்.தெரிந்ததைச் சொல்லலாம் தெரியாததை எப்படிச் சொல்ல முடியும்? ஏன்சார்... நீங்களே சொல்லுங்கள். உருளைக்கிழங்கு போண்டா என்றால் உருளைக் கிழங்கு இருக்கும் அதற்காக மைசூர் போண்டா என்றால் உள்ளே என்ன மைசூரா இருக்கும்?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# தமிழர்களுக்கான நிவாரண சேகரிப்பில் ஈடுபடும் கனேடிய எதிர்க்கட்சித் தலைவர்!

(ரொறன்ரோ)

கனேடிய எதிர்க்கட்சித் தலைவரும், பழமைவாதக் கட்சியின் தலைவருமான ஸ்ரீபன் ஹார்ப்பர் நேற்று முன் தினம் ரொறன்ரோவில் இடம்பெற்ற ஆழிப்பேரலை



அனர்த்தப் பொருள் சேகரிப்பிலும், இப்பேரனர்த்தம் தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

ரொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கும் ரொறன்ரோ தமிழ்க் கத்தோலிக்க சமூகமும் இணைந்து மேற்கொண்டுவரும் பேரலையனர்தத நிவாரணப் பொருட்கள் சேகரிப்பின் ஒரு அங்கமாக அப் பொருட்களை பெட்டியிலடைத்தல் மற்றும் கொள்கலனில் ஏற்றல் ஆகிய செயற்பாடுகள் நேற்று முன்தினம் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் கனடா பாராளுமன்றின் உத்தியோக பூர்வ எதிர்க் கட்சித் தலைவரும், கனடா பழமைவாதக் கட்சியின தலைவருமான ஸ்ரீபன் ஹார்பர் கலந்து கொண்டார்.

ஏற்கனவே சேர்க்கப்பட்ட பொருட்களை இலங்கைக்கு ஏற்றிச் செல்வதற்கு 7 பாரிய கொள்கலன்கள் ஏற்பாடு செயயப்பட்டுள்ளன. மேற்படி ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கின் இந் நிவாரண சேகரிப்பிற்கு கனடாவிலுள்ள இந்து முன்னணி மற்றும் சீக்கிய ஆலயம், யூதர்களின் பிரபல்ய தொணடு நிறுவனமான பினே பேர்த் கனடா ஆகியன உட்பட பல்வேறு அமைப்புக்கள் உதவி புரிந்துள் ளன.

இலங்கையில், கியூடெக், திருமறைக் கலாமன்றம், லயன்ஸ் கிளப், றோட்டரி கிளப் ஆகியன உட் பட வடக்கு கிழக்கு கத்தோலிக்க ஆயர்களும் ஏனைய சமூக நிறுவனங்களும் இந் நிவாரணப் பொருட்களைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்கவுள்ளனர். ரொறனரோ புனித ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கு மக்கள், இது வரை எழுபதினாயிரத்திற்கும் அதிகமான கனேடிய டொலர்களை நிதியாகச் சேகரித்துளளமை குறிபபிடத்தக்கது. (ற-4)

# மட்டு. அம்பாறை மாவட்டங்களில் புனரமைப்புப் பணிகள் மந்தகதியில்!

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

(மட்டக்களப்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அமைச்சர்கள், பிரதி அமைசசர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி விஜயம் செய்து அழிவுகளைப் பார்வையிடுவதுடன் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகிறார்களே தவிர, உருப்படியாக எதுவுமே கிட்டுவதில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட மீட்புப் பணிகளுக்கு ஒரேயொரு கனரக வாகனம் மட்டுமே இன்று வரை அரசி னால வழங்கப்பட்டுள்ளது. இங்கு வந்த பல்வேறு அமைசசர்களும் கனரக வாகனங்களை உடன் அனுப்பி வைப்பதாகக் தெரிவித்தார்கள்.

ஆனால, எதுவுமே சாத்தியமாகவில்லை என மட்டக்களபபு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி விசனம் தெரிவித்துள்ளார்.

இவற்றை விட 30 ஆயிரம் கூரைத் தகடுகளை வழங்குமாறு இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதற்கு அமைய 47,742 கூரைத் தகடுகளை உடனடியாக அனுப்பி வைப்பதாக குழுக்களின் பிரதித் தலைவர் எஸ்.சச்சிதானந்தன் உறுதி அளித்திருந்ததாகவும் இ.தொ.கா.வின் குழு ஒன்று தற்போது மட்டக்களப்பில் தங்கியிருந்து மீட்புப் பணிகளில் கவனம் செலுத்தி வருகிறது. என்றும் க.தங்கேஸ்வரி எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, நிவாரணப் பணிகளுக்கு அரசு இது வரை 5 கோடி ரூபா வழங்கியுள்ளதாக அரச அதிபர் வே.சண்முகம் தெரிவித்தார். அவர் மேலும் தகவல் தருகையில் கடந்த 12ஆம் திகதி இ. தொ.கா. தலை வர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் பிரதியமைச்சர் எம்எஸ் செல்லச்சாமி பாராளுமன்ற உறுப்பினர்களின் முத்து சிவலிங்கம், சுரேஸ் வடிவேல், க.ஜெகதீஸ்வரன குழுக்களின் பிரதித் தலைவர் எஸ். சச்சிதானந்தன் ஆகியோர் இங்கு விஜயம் செய்த போது கனரக வாகனங்களையும் கூரைத் தகடுகளையும் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதற்கு அமைய 5 கனரக வாகனங்கள் அனுப்பப்பட்டு மட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இதற்கான செலவுகள் அனைத்தையும் இ.தொ.கா.வே பொறுப்பேற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார். (ற-4)

# இராசி பலன்

**19.01.2005**
**(தை 6 புதன்கிழமை)**
**நவமி முற்பகல் 6.42 மணிவரை**
**பரணி பி.ப. 01.34 மணி வரை**
**இராகுகாலம2.02 -3.32 மணிவரை**
**சுபநேரம் 08.02 - 09.32 மணிவரை**
**சித்தாமிர்தம்**
**கார்த்திகை விரதம்**

**மேடம்** வெகுமானம், மனமகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம்.

**இடபம்** சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், சுபசெலவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**மிதுனம்** நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை, தனதானிய சேர்க்கை, குடும்பசுகம்.

**கடகம்** தேசாந்திர வாசம், பிரபுத்தனம், சரீரப் பிரயாசை, முயற்சி கைகூடும்.

**சிங்கம்** வயிற்றுக் கோளாறு, நிர்ப்பந்திக்கப் படுதல், முயற்சி தாமதம். வீண்செலவு.

**கன்னி** சரீரபீடை, பொருள் விரயம், உறவினர் வெறுப்பு, வாகனபயம்.

**துலாம்** தேகநலன், பெருமையடைதல், போசனநன்மை, பிரயாணசுகம்.

**விருச்சிகம்** புதிய தகவல், தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் நன்மை, அதிகாரம்.

**தனுசு** அஜீரணரோகம், கௌரவக்குறைவு, புத்திரரால் கவலை, காரிய இடையூறு.

**மகரம்** தன்னம்பிக்கைக் குறைவு, ரோக நிலை, தனவிரயம், முயற்சி தாமதம்.

**கும்பம்** உற்சாகம், நல்லகாரியம், கலந்துரையாடல், தொழில் நன்மை.

**மீனம்** உணர்ச்சி வசப்படுதல், அதிகசெலவு, போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

# 'சுனாமி' அனர்த்தம் குறித்து புதிய பல தகவல்கள்

(கொழும்பு)

சுனாமி தொடர்பாக ஆராய்ந்து வரும் உலகின் தலை சிறந்த விஞ்ஞானிகள் குழுவினர் புதிய பல தகவல்களை தற்போது வெளியிட்டுள்ளனர்.

இதன்படி, இலங்கையின் விஞ்ஞான சமூகத்தவர்களும் அரசாங்கமும் செயற்படவேண்டியுள்ளது.

இதனால் நீண்டகாலத் திட்டங்களையும் புனர்நிர்மாணப் பணிகளையும் அரசாங்கம் தீவிரமான மாற்றங்களுக்கு உள்ளாக்க வேண்டும்.

இத்தகவலை விஞ்ஞான தொழில்நுட்ப மறுசீரமைப்பு அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். சுனாமி தொடர்பான சர்வதேச மாநாட்டில் இவர் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அம் மாநாட்டில் விஞ்ஞானிகள் முன்வைத்த அறிக்கையானது முற்றிலும் புதுமையானதாகவும் அரசாங்கம அது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நிலைப்பாடு காணப்பட்டதாகவும் கூறிய அவர், கடற்கரையிலிருநது 300 மீற்றருக்கு அப்பால் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டுமென அரசாங்கம் அறிவித்துளளது.

ஆனால் மாநாட்டின் படி சுனாமி பாதிக்கப்படக கூடிய பரதேசங்களை கடல் படுக்கைகளை ஆராய்ந்தே இனங்காண வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (ற)

# முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவது மற்றும் சேதமடைந்த பகுதிகளை புனர் நிர்மானம் செய்வது தொடர்பாக ஆராயும் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு யாழ். செயலகததில அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-19)

# சுனாமி ஆழிப்பேரலை தந்த விளைவுகளினால் இலங்கையில் சமாதானம் நிலைபெற வாய்ப்பு

## பிரான்ஸ் நாட்டின் பிரபல நாளேடு நம்பிக்கை

(பிரான்ஸ்)

**இலங்கையில் தனித்துவமாகப் போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் சுனாமி ஆழிப் பேரலை நிகழ்த்திய அனர்த்தத்தின் பின் தமிழ் மக்களைப் பாதுகாப்பும், பராமரிக்கும் வல்லமையை வெளிப்படுத்தினார்கள்.**

**சுயாதீனத்தை விரும்பும் புலிகள் அதனைத் தம் தேசத்தில் நிகழ்த்திக் காட்டினார்கள் என பிரான்ஸின் பிரபல ஏடான "மெட்ரோ" தெரிவித்துள்ளது.**

சுனாமி அடித்து ஓய்ந்த சில கணங்களின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்றினார்கள்.

கடலில் மிதந்த பிணங்களை மீட்டெடுக்கும் பணியிலும் மிகச் சிறப்பாக இயங்கினார்கள். அவர்கள் அகதிமுகாம்களை அமைத்து பாதிக்கப்பட்ட மக்களை அங்கு தங்க வைத்தனர்.

அதற்கு அப்பால் பாதுகாப்பு அரண்களை அமைத்து திகில் அசைவுகளைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்தார்கள்.

அதாவது கொள்ளைகள் நடைபெறாமல் தடுப்பதற்கான செயல்களில் இறங்கியிருந்தார்கள். வாகனங்களில் காயப்பட்டவர்களை மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் சென்றார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரத்தம் வழங்குவதிலும் அவர்கள் முன் நின்றார்கள். ஒலி, ஒளிப் பதிவு கருவிகளுடனும் கனணிகளுடனும் விடுதலைப் போராளிக் குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இறந்தவர்களின் முகங்களைப் புகைப்படம் எடுத்தார்கள்.

அடையாளம் காணுவதற்காக அவற்றை ஆவணப்படுத்தினார்கள். அதன்பின்னர் இறந்தவர்களின் உடல்களை எரித்தும், புதைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டனர்.

அவர்களின் இராணுவம் மிக நன்றாக வேலை செய்யும் திறன் மிக்கதாக இருந்தது என உதவி செய்வதற்காக அங்குவருகை தந்திருந்த பிரித்தானியாவைச் சேர்ந்த கலாநிதி ருபன்துரை ராஜா தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான முறையில் நிவாரண உதவி கிடைக்கும் என்பதில் அக்கறையாக விருந்தார்கள்.

பேரழிவின் முன்னால் இலங்கை அரசு செயலற்றதாகவே இருந்தது. 1983ம் ஆண்டில் இருந்து நாட்டின் வடக்கிலும் கிழக்கிலுமாக விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்றார்கள்.

அங்கு சிறுபான்மையினராக தமிழர்கள் இருக்கின்றார்கள். மற்றும் இலங்கையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றார்கள்.

புலிகள் இரத்தம் சிந்தி தற்கொலை மூலம் நன்கு அறியப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். 2002ம் ஆண்டில் இருந்து போர் நிறுத்தச் செயற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன. சுனாமி ஆழிப் பேரலை புலிகளுக்கும்- அரசிற்கும் இடையே ஒரு சமாதானத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்றாக வேலை செய்வதற்கான உடன் பாடுகளினையும் எட்டலாம். சமாதானப் பேச்சுக்களும் உருவாகி இலங்கையில் ஒரு மாற்றம் நிகழலாம் என அவ் ஏடு மேலும் தெரிவித்துள்ளது. (ப-4)

### உபகரணங்கள் கையளிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு யாழ். மாவட்ட இராணுவத்தினரால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உபகரணம் வழங்கும் இந்நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அரசஅதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ரு-19)

### பரீட்சை

வடக்கு-கிழக்கு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற தையல் பயிர்சிப் பரீட்சைகள் கடந்த டிசம்பரில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் பின்னர் சுனாமி அனர்த்தம் காரணமாக இப் பரீட்சைகள் ஒத்திவைக் கப்பட்டிருந்தன.

இந் நிலையில் இப்பரீட்சைகளை எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட கிராமிய அபிவிருத்தித் திணைக்கள இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சை, மற்றும் செய்முறைப் பரீட்சையாக யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடாத்தப்படவுள்ளது. (ரு-5)

# சுனாமியால் இடம் பெயர்ந்தோருக்காக வடமராட்சியில் இடைத்தங்கல் முகாம்கள்

## 1933 குடும்பங்கள் இவற்றில் தங்கவைக்கப்படவுள்ளன

(தென்மராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கென ஆயிரத்து 933 தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்படவுள்ளன.

இவ்வகையில், கற்கோவளம், தும்பளை, முனை, கொட்டடி, சுப்பர் மடம், இன்பருட்டி, சற்கோட்டை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டைமானாறு, எரிந்த அம்மன் கோவில், வியாபாரிமூலை, மணற்காடு, பொற்பதி, திக்கம், புனிதநகர் ஆகிய பிரதேசங்களிலுள்ள அரச காணிகளில் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்படும்.

இக்கொட்டகைகள் அமைக்கும் பொறுப்பினை, கியூடெக், சேவா லங்கா மற்றும் சிறுவர் பாதுகாப்பு இலங்கை ஆகிய நிறுவனங்கள் ஏற்கவுள்ளன என்றும் இடைத் தங்கல் முகாம்களில் தண்ணீர் வசதிகளை யுனிசெவ் நிறுவனமும், பட்டினிக்கு எதிரான இயக்கமும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளன.

அத்துடன், இத்தகைய இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்படவுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான 304 மலசலகூடங்களை யுனிசெவ், பட்டினிக்கெதிரான இயக்கம் மற்றும் சீ.ஏச்,எவ். போன்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும், 79 கிணறுகளை அமைக்கும் பணிகளை போரூட் நிறுவனமும் மற்றும் முன்பள்ளிகள், பொது மண்டபங்கள் அமைத்தல் போன்ற பணிகளை வேறு சில சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் அமைத்துக் கொடுககவுள்ளன என நெல்லியடியில் இயங்கிவரும் சுனாமி பேரழிவு குறித்த பணிகளை முன்னெடுத்துவரும் கூட்டுச் செயலணி மூலம் தெரியவருகின்றது.

இதேவேளை வடமராட்சி பிரதேசத்தில் தற்போது இயங்கிவரும் நலன்புரி நிலையிங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களை இம்மாதம் 25ஆம் திகதி முதல் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றம் செய்வதன் மூலம் பாடசாலைகளை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சுனாமி பேரழிவினால் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் 40 முன்பள்ளிகளும், 17 அரச பாடசாலைகளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. இருந்த போதிலும் கூட, மேற்படி பிரதேசங்களில் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்கள், இழப்புக்கள், நஷ்டங்கள் பற்றிய பூரணத்துவமிக்க தகவல்கள் எதுவும் பெறக்கூடிய வகையில் இல்லாமல் இருப்பதாக யர்ழ்ப்பாணத்தில் இயங்கிவருகின்ற மனித உரிமைகள் பாதுகாத்தலுக்கும் மேம்படுத்தலுக்குமான மாவட்ட சமூக பாதுகாப்புக் குழு விசனம் தெரிவித்துள்ளது.

இது இவ்வறிருக்க புதிதாக அமைக்கப்படவுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கான அரச மற்றும் தனியார் காணிகளைத் துப்பரவு செய்யும் பணிகள் அந்தந்த இடங்களில் மேற்கொண்டு வருவதாகவும் அறியப்படுகின்றது. (ப-16)

# சுனாமியால் வட-கிழக்கில் 2400 மாணவர்கள் பலி

(திருகோணமலை)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தல் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 2400 பாடசாலை மாணவர்கள் பலியாகியுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விஜயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதியாகக் கிடைக்கப் பெற்ற புள்ளி விவ ரங்களின் படி 1502 பாடசாலை மாணவர்கள் கல்முனை கல்வி மாவட்டத்தில் பலியாகியுள்ளனர். முல்லைத்தீவில் 130 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை எதிர் காலத்தில் மேலும் அதிகரிக்கலாம். மட்டக்களப்பில் 235 பேரும், திருகோணமலையில் 38 பேரும் பலியாகியுள்ளனர். மூதூரிலும் அக்கரைப்பற்றிலும் முறையே 217 மற்றும் 141 மாணவர்கள் அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள 24 கல்வி மாவட்டங்களில் 9 கல்வி மாவட்டங்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் படுபயங்கரமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ் அனர்த்தத்தில் சிக்கி அழிந்த 55 பாடசாலைகளினதும் இழப்பு சுமார் 43 கோடி 60 லட்சம் ரூபாவாகும். அங்கிருந்த தளபாடங்களுக்கு ஏற்பட்ட இழப்பின் பெறுமதி சுமார் 7 கோடி 28 லட்சம் ரூபாவாகும். பாடசாலைகளில் இருந்த கனணி மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் 5 கோடி ரூபாவாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ரு-4)

# கூலி அதிகரித்துள்ளதால் முதலாளிமார் அதிருப்தி

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையின் அறுவடைக்கான கூலிகள் முன் எப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளமை குறித்து விவசாயிகள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

நெல் அறுவடைக்கு ஆண்களுக்கான நாளாந்தக் கூலியாக ரூபா உணவுடன் 450 ரூபாவும் பெண்களுக்கான கூலியாக மதிய உணவுடன் 400 ரூபாவும் தென்மராட்சி பிரதேசத்தில் தற்போது வழங்கப்பட்டு வருகின் றது.

இதன் காரணமாக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் நெல் அறுவடைக்கென பெருந்தொகையான நிதியைச செலவிட வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேசமயம் நெல் அறுவடைக்கான நாளாந்த கூலி அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து, இவ் வேலைக்கென பல இளைஞர்களும் யுவதிகளும் சென்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

# கொடிகாமம் சந்தியில் உள்ள பேருந்து நிலையத்தினை திருத்தித்தரக் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தின் நகரமாக விளங்குகின்ற கொடிகாமம் பேருந்து நிலையம் போதிய வசதிகள் இல்லாமல் இருப்பதால் பயணிகள் நாளாந்தம் பல அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

கொடிகாமம் பேருந்து நிலையம் மிக முக்கியமான தொன்றாக விளங்கிவருவதால், இங்கு பஸ் பயணத்துக்காகக் காத்து இருப்பவர்கள் கொகை எப்போகும் அதிகமாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் இப் பேருந்து நிலையத்துக்கு வரும் பஸ் பயணிகள் இருக்கக் கூடிய வசதிகளும் மிகவும் குறைவாகவே உள்ளன.

இவ்வகையில் கொடிகாமம் பேருந்து நிலையத்தினை வசதிகள் கொண டதாக அமைத்துத் தரும்படி இப் பகுதியின் பொது அமைப்புக்கள் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (ப-16)

### பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ.பல்கலைக்கழக ஊழியா சங்கத்தின் 25ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று புதன் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு தவறாது சகல அங்கததவர் களையும் கலந்துகொள்ளுமாறு இணைச் செயலாளர் கேட்டுள்ளார். (ரு-5)

## மின் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்** 42

"எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராமகாதை பங்குனி உத்ர நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே

இக் கவியிற் சொல்லிய எண்ணூற்றேழு எண் 1000+107 என நின்று சகாப்தம் 1107 ஆகுமென்று அது கிறீஸ்தாப்தம் 1185ஐக் குறிக்கும் என்றும் இது பிற ஏதுக்களைக்கொண்டு நிச்சயித்த கம்பர் காலத்துக்குப் பொருத்தமுடையதென்றும் கற்றோர் கூறுவர். ஆகவே நம் யாழ்ப்பாணத் தனிக் கவி கூறும் ஆண்டு 1000+170 என வந்து கிறீஸ்தாப்தம் 1248 க்குச் சரியாகும். இவ்வாண்டு காலிங்கச் சக்கரவர்த்தி புலத்தி நகரை வீட்டகன்ற ஆண்டுக்கு (1242) ஆறாண்டு மட்டும் பிற்பட்டது. இக்காலந்தான் யாழ்ப்பாண நகர் நிர்மாணித்து முடிவெய்தியது என்பது மிகப் பொருத்தமுடைத்து நிர்மாணித்து முடிவெய்தியது என்பது மிகப் பொருத்தமுடைத்து (யா.வை. வி.பக் 67) இது மகா தப்பிதமான முடிபு. (யாழ்ப்பாண நகர் எதுவென்பதை அதாவது நல்லூர் நகரா, சிங்கை நகரா, யாழ்ப்பாணப் பெயர் உள்ள நகரா அல்லது யாழ்ப்பாணத்தே கட்டப்பட்ட நகரா) இலக்கிய சகாப்தம் 670 என்பது கம்பர் காலத்துக்கு 200 ஆண்டுவரை முற்பட்ட பாட்டு, 10ஆம் நூற்றாண்டு வுரை வாழ்ந்த சிங்கையாரியனையும் அவன் மந்திரியையும் பாடியது. அப்பொழுது கம்பர் பிறக்கவில்லை. அவர் பாடல் பெறவுமில்லை. இன்னும் என்னவெனில் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழப்பாணன் இறந்து போகக்கொஞ்சக் காலம் தளப்பம் நாட்டை அதனைச் சகிக்கலாற்றாத பாண்டிமழவன் சிங்கையாரியனை அழைத்துவந்து அரசியற்றினான் என்பதாலும் அது பத்தாம் நூற்றாண்டென்பது நிச்சயமாயிற்று. கம்பர் காலத்துக்குப் பிற்பட இப்பாடல் எழுந்தால்தான் அதை அனுசரித்து இப்பாடல் எழுந்ததெனலாம். நிற்க.

பொலநறுவையினை விட்டு ஓட்டங்கொண்ட மாகன் யாழ்ப்பாணம் வந்தான் என்பதற் கொரு ஆதாரமுமில்லை. அவன் தலைநகர் அங்கே அமைத்த ஆதாரமுமில்லை. எனவே அவன் அங்கே வாழ்ந்த குறிப்பும் கிடைக்கவில்லை. அவன் வரவில்லை என்பதே முடிபு. பொலநறுவையில் இறந்தானா? வழியில் இறந்தானா? அரச வாழ்க்கை ஆபத்தானது அப்படியானால் இப்பாடல் அப்பொழுது வந்துள்ள இருந்துள்ள ஒருவன் மேலேதான் பாடப் பட்டதென்க. நிற்க.

இப்பிறர் இக்கைலாயமாலையில் பாண்டிமழவன் போனதும், அவன் அழைப்பை ஏற்று சிங்கையாரியன் வந்ததும் நிகழாநிகழ்ச்சி என்கின்றனர். அவ்வகையிலே இக்கைலாயமாலை தள்ளத்தக்க நூலென்கின்றனர் அங்கனமாயின் அது சொல்லும் இப்பாடலைச் சான்றுக்கு எடுத்துக் காட்டக் கூடாது நிற்க.

கலிங்க மாகன் வந்ததைக் குறிக்க ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை. சிங்கையாரியன் வந்ததைக் குறிக்கும் இந்த ஆண்டைத் தான் எடுத்துக்காட்டி அம்மாகன் வந்ததாக நிச்சயம் செய்தார் எனின், உண்மையில் வந்தவன் சிங்கையாரியன் என்றும் மாகன் அங்ஙனம் வரவில்லை என்றும் நிச்சயம் என்றும் கண்டு கொள்க. இப்பொழுது 13ஆம் நூற்றாண்டென்று நிச்சயம் பண்ணப் பொருள் தந்து நிற்பது ஒரு சிலாசனத்தால் அல்ல, ஒரு புதைபொருளால் அல்ல, வேறும் ஏதுஞ்சான்றுக்களால் அல்ல. 870 ஓடு 300ஐக் கூட்டி 1170 என்று பொருள் பண்ணிக் கண்ட வகையால் என்க. நிற்க. அப்பாடல் இவர்கள் ஒருவர் இருவர்க்காகப் பாடப்பட்டதல்ல. அக்கவிராயர் தாம் அறிந்து கொண்ட உலகத்திலே புழக்கத்தில் இருந்து கொண்டிருக்கிற எண்மதிப்பைப் பின்பற்றித்தான் பாடி இருப்பார். அவர் ஈண்டுச் சொல்லக் கருதியது எட்டு நூறையும் எழுபதையுங் கொண்ட 870 ஐத்தான் பொருள பண்ணுவது புலவர் உள்ளக் கருத்துக் கொத்தாம்.

அங்கே வெளிப்படையாக என்ன விலையோ அது தான் விலை. 1170ஐ அவர் கருதி இருப்பாரானால் அதற்குரிய சொற்கள் போட்டுப் பாடி இருப்பர். கவிஞர் யாவரேனும் தம் உள்ளக் கருத்து வாசகர் உள்ளத்திலே கருகல் இன்றித் தெளிவாக விளங்க வேண்டிய வழிவகைகளைப் பின்பற்றி அதற்குரிய சொற்கள் போட்டுப்பாடுவதுதான் வழக்கம். அங்ஙமாயின் என்னை முன்னர் கம்பர் காலத்தைச் சுட்டிப்பாடிய எண்ணிய சகாப்தம் 807 என்னும் கவி கம்பர் காலத்திற்கு பொருள் கொடுக்கவில்லையெனில் இல்லை அதுவும் பிழை, அவ்வழியைப் பின்பற்றி 1170 என்று கண்ட இதுவும் பிழை, ஒரு பிழையை எடுத்துக் காட்டிய அவ்வழியைப் பின்பற்றி இதுவும் பாடினேன் என்றால் இதுவும் பிழைதானே என்பது சொல்லாமல் போதரும். இவ்வுண்மையை இன்னும் துணிவாம் (செந்தமிழ் 3ஆம் தொகுதி பக்கம் 177-181) ரா. ராகவ ஐயங்கார் சொல்வதாவது முதலாம் பிரஸ்தாப உருத்திரனுடைய ஆட்சியின் இறுதிக்காலமாகிய கி.பி. 1197 லும் கம்பர் இருந்து அவனால் அடைப்பைக் கட்டும் சிறப்பைப் பெற்றனர் என்பது விரோதமில்லையாம். இதனால் கம்பருக்கு அடைப்பை கட்டினவன் முதலாம் உருத்திரன் எனவும் அவன் அவருக்கது புரிந்த காலம் கி.பி.1116க்கும் 1197க்கும் இடைப்பட்டதாகும் எனவும் கொள்ளத்தக்கது. இதனாற் கம்பருடைய காலத்துக்கு இறுதியியெல்லை முதலாம் உருத்திரனுடைய அரசாட்சியின் இறுதிக்காலமேயென்றுணர்ந்து கொள்க... கி.பி.1164க்குப் பிற்பட்டகாலம் இராசராசன் காலமாதலால் கம்பர் ஓரங்கல் உருத்திரன் பாற்சென்று சிறப்பெய்தியதும் அவன் காலத்தேயாதல் ஒரு தலையாம் இதனால் கம்பரை முனிந்தவனும் கொற்றவனுமாகிய சோழன் இராசராசனே என்பதுய்த்துணரப்படும். கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியதும் இவ்விராசராசன் காலமேயாகும். கூத்தர் தக்கயாக்ப் பரணி பாடியதும் இக்காலமேயாகும்... இனி, எண்ணிய சகாப்தம் எண்ணூற் றேழின் மேல் சடையன் வாழ்வு பண்ணிய இராமகாதை அரங்கேற்றினானே என்பதனாற் கம்பர் இராமாயணம் அரங்கேற்றியகாலம் சகாப்தம் எண்ணூற்றேழு என்று கூறுவதால் கம்பர் காலம் மேற்காட்டிய காலத்துக்கு 300 வருடம் முற்பட்ட தன்றோவெனின் கூறுவேன் சகாப்தம் 807 என்பது கி.பி.885 ஆகும். அது விக்கிரமன் காலத்துக்கு நெடுந்தூரமானது. அங்ஙனமாயின் அது ஒட்டக்கூத்தர் காலமுமன்று. கூத்தர் காலமன்றாயின் சங்கரன் கங்கரன் காலமுமன்று. சங்கரன் காலமன்றாயின் சடையன் சேதிராயன் காலமுமன்று. சேதிராயன் காலமுமன்றாயின் கம்பர் காலமுமன்றாம் ஓரங்கலுருத்திரன் காலமும் இஃ தன்றாதல் கூற வேண்டாம். இங்ஙனம் கம்பர் காலத்தவராகத் தெரியப்பட்ட வேறு பல் காலங் களுக்கு கி.பி. 885 பொருந்தாதாகவின் அது கம்பருக்கும் பொருந்தாதென்பது ஒரு தலை மேற்காட்டிய பிரபல பிரமாணங்களாற் திரிபுபட்ட கம்பர் காலத்தோடு பொருந்தவைத்து நேசாக் கின இந்த எண்ணிய சகாப்தம் என்ற செய்யுள் சிறிது பாடம் பிழைத்ததென்றேனும் வேறோர் பொருளுடையதென்றேனும் கருதப்படும். இத்துடன் இன்னொரு பெரியார் கூற்றையுந் தருவாம்.

(தொடரும்)

---

சுனாமியின் மற்றுமோர் அவலம்

## 4 மாத ஆண் குழந்தைக்கு உரிமை கோரும் 5 பெற்றோர்

(கல்முனை)

கல்முனை வைத்தியசாலையில் பெற்றோர் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ள நிலையிலுள்ள 4 மாத ஆண்குழந்தைக்கு ஒரு தம்பதியினர் சட்ட ரீதியாக உரிமை கோரியுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்த நாளன்று தெருவோரம் அநாதரவான நிலையிலிருநத இந்தக் குழந்தை அன்றைய தினம் மாலை வயோதிபர் ஒருவரினால் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் பராமரிப்பிலுள்ள இக் குழந்தைக்கு தாம்தான் பெற்றோர் என 5 பேர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் உரிமை கோரிய போதிலும் ஜெயராஜா - யுனிட்டா என்ற தம்பதிகள் சட்ட ரீதியாக தங்களுடைய குழந்தை என அக்குழந்தையை உரிமை கோரியுள்ளார்கள்.

இது தொடர்பாக கல்முனை பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையையடுத்து நீதிமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்துள்ளது. குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலையின் பராமரிப்பில் உள்ளது. (ந-4)

## அரசின் நிவாரணப் பணிகள் முழுமையாக நடைபெறவில்லை

### சர்வ மதத் தலைவர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தின் நிவாரணப பணிகள் யாவும் முழுமையாக வழங்கப்படவில்லை என சர்வ மதத் தலைவர்கள குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் பௌத்த பிக்குவான கம்புறுவேவ வஜிர தலைமையிலான சர்வமதத் தலைவர்கள் குழுவினர் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இக்குற்றச்சாட்டை அவர்கள் தெரிவித்தனர்.

இநதக் குற்றச்சாட்டை ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் சுமத்திய போது அதனை அரசாங்கம் ஏற்க மறுத்தது.

அததுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பிழையான கருத்தை வெளியிட்டு வெளிநாட்டு நிதிகளைத் தாம் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என அரசாங்கம் தெரிவித்திருந்தது.

தற்சமயம் சர்வமதக் குழுவினரும் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர். எனினும் அரசு. மௌனம் காத்துவருகிறது. (ந-4)

## குறைபாடுகள் பற்றி முறையீடு செய்யலாம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சுனாமி அனர்த்த நிலைமைகள் தொடர்பான பணிகளில் காணப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்வதற்கான விசேட கருமபீடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுனாமி தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளல், நிவாரணம் பெறுதல் சம்பந்தமான முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் அவற்றை இக்கரும பீடத்திலுள்ள பொறுப்பான அலுவலரிடம் தெரிவித்துக் கொள்ளலாம் என பருத்தித்துறை பதில் பிரதேச செயலர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார். (ப-35)

## மந்திகை வைத்தியசாலையில் அமெ.வைத்தியர்கள் சேவை

(மருதங்கேணி)

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அமெரிக்க வைத்திய குழுவொன்று நேற்று முன்தினம் மாலை வந்து சேர்ந்தது. இவ்வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துவகைகள், மருத்துவ உபகரணங்கள், சத்திர சிகிச்சை கூடத்திற்குத் தேவையான பொருட்கள் என்பவற்றையும் இவர்கள் எடுத்து வந்துள்ளனா.

இவ் வைத்திய குழுவில் டாக்டர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் என 25 பேர் அங்கம் வகிக்கின்றனர். (ப-25)


## அறிவித்தல்

**தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்கம், சாவகச்சேரி 14ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்-2005**

மேற்ப்டி சங்கத்தின் பொதுக்கூட்டம எதிர்வரும் 30.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு (இலங்கை நேரம்) சாவகச்சேரி யா/டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவா திரு. நா. தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறும். பிரதமவிருந்தினராக திரு. நடராசா இரவிராஜ், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (யாழ். மாவட்டம்), சிறப்பு விருந்தினர்களாக திரு. எஸ். ஸ்ரீநிவாசன் பிரதேச செயலர் தென்மராட்சி, திரு. சி.வி.கே. சிவஞானம் தலைவர் யாழ். மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்களின் சமாசம் ஆகியோர் வருகை தரவுள்ளனர். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது வருகை தரும்படி விநயமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம். கூட்டத்திற்கு வருகை தரும் அங்கத்தவாகளுக்கு பஞ்சாங்கக் கலண்டர் வழங்கப்படும்.

நா.தண்டாயுதபாணி — தலைவர்
வே.சிவப்பிரகாசம் — பொருளாளர்
Dr.இ.கந்தையா, J.P — செயலாளர்

(9230)

# அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் சட்ட தேவைப்பாடுகள்

## -ஓர் ஆய்வு

ச.சிவரூபன்
சட்டத்தரணி

(1) ஒரு நபர் தன் சார்பாக செயற்படுவதற்காகத் தனக்குரிய அதிகாரத்தை அல்லது அதிகாரங்களை (**powers**) இன்னொருவருக்கு சட்டரீதியாக எழுத்து மூலம் (**written**) வெளிப்படையாக வழங்குவதே அற்றோணித் தத்துவப் பத்திரம் ஆகும். அற்றோணித்தத்துவப் பத்திரம் உரிய அதிகாரங்களை உள்ளடக்கி கட்டாயமாக எழுத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இவ் அற்றோணித் தத்துவப் பத்திரம் வெளிப்படையான முகவராண்மை (**Agent**) ஆகும்.

இலங்கையில் அற்றோணித் தத்துவப் பத்திரம் பற்றி 1902 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க அற்றோணித்தத்துவ கட்டளைச் சட்டத்தின் படியும் (**Powers of Attorney Ordinance**) அதற்குப் பின்னர் வந்த திருத்தச் (**Amendments**) சட்டங்களின்படியும் இலங்கையின் மேன் முறையீட்டு நியாயாதிக்கம் உள்ள நீதிமன்றங்களின் (**Appellate Courts**) தீர்ப்புகளின்படியும் விரிவாக எடுத்துக்கூறப் பட்டுள்ளது.

இதன்படி மேற்படி அற்றோணித் தத்துவ கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02தத்துவக்காரர் (**Attorney**) என்பதற்கு யாருடைய பெயருக்கு உரிய செயலை மேற்கொள்ள தத்துவம் வழங்கப்பட்டுள்ளதோ அவ் அற்றோணித்தத்துவப் பத்திரத்தை வைத்திருப்பவரைக் குறிக்கும் என்கிறது. மேற்படி அதே பிரிவு 02 இல் அற்றோணித் தத்துவப் பத்திரம் (**Power Of Attorney**) என்பதற்கு எழுத்திலான தத்துவம் அல்லது அதிகாரத்தை (**Power or quthority**) ஒரு சட்டத்தின் (**Attorney-at-Law**) அல்லது சட்டமுகவர் (**Law agent**) தவிர்ந்த வேறொருவருக்கு ஒரு செயலை செய்வதற்கு (**do any act**) அல்லது ஒரு வேலையை நிறைவேற்றுவதற்கு (**Perform any work**), ஒரு வர்த்தகத்தை (**Trade**) அல்லது வியாபாரத்தை (**business**) கொண்டு நடாத்துவதற்கு இன்னொருவரால் வழங்கப்படும் அதிகார தத்துவப் பத்திரம் ஆகும்.

மேற்படி அதே பிரிவு 02 இல் யார் முன்னிலையில் அற்றோணித் தத்துவப் பத்திரம் நிறைவேற்றப்பட (**Executed**) வேண்டும் என்பதற்கு அது பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு வகையில் நிறைவேற்றப்படலாம் என்கிறது. அதாவது அற்றோணித் தத்துவத்தை அல்லது தனது அதிகாரத்தை வழங்குபவர் (**Grantor**) இரு சாட்சிகள் முன்னிலையில் மட்டும் (**executed before two witnesses**) அல்லது ஒரு நொத்தாரிசு (**Notary Public**) முன்னிலையில் அல்லது சமாதான நீதிவான் (**Justice of the [peace**) முன்னிலையில் அல்லது பதிவாளர் (**Registrar**) அல்லது பிரதிப் பதிவாளர் (**Deputy-Registrate**) முன்னிலையில் அல்லது நீதிபதி (**Judge**) அல்லது நீதிவான் (**Magistrate**) முன்னிலையில் அல்லது இலங்கையின் வெளிநாட்டிலுள்ள வதிவிடப்பிரதிநிதி (**Ambassador**) உயர்ஸ்தானிகர் (**High Commissioner**) முன்னிலையில் அல்லது பதிவாளர் நாயகம் (**Registrar- General**) அல்லது பிரதி அல்லது உதவி (**Deputy or Assistant Registrar- General**) பதிவாளர் நாயகம் முன்னிலையில் நிறைவேற்றப்படலாம் என்கிறது.

இங்கு இரு சாட்சிகள் முன்னிலையில் நிறைவேற்றப் படும் போது அதிகாரம் வழங்குகின்ற (**Grantor**) நபரினதும், இரு சாட்சிகளினது ஒப்பமும் ஒரே சமயத்தில் இடப்பட்டு எல்லோரினதும் முழுப் பெயர், விலாசம், அடையாளத்தை உறுதிப்படுத்தும் பத்திர இலக்கம் (**Indetity Card or Passport**) இடுதல் மோசடியை (**Fraud**) தவிர்க்க அல்லது கண்டுபிடிக்க உதவியாக இருக்கும். ஏனையோர் முன்னிலையில் நிறைவேற்றப்படும் போது அவர்களின் கையொப்பத்தின் அருகே பதவி இலட்சணையை (**Frank or seal**) பொறிக்க வேண்டும் மேலும் ஒரு அற்றோணித் தத்துவம் நிறைவேற்றப்பட்ட இடவிலாசமும், திகதியும் கட்டாயம் குறிப்பிட வேண்டும். பதவி இலட்சணை பொறித்தலும் கட்டாயமானது ஆகும்.

ஒரு ஆற்றோணித் தத்துவப் பத்திரத்தை வைத்திருப்பவர் (**Attorney**) அதனை பதிவாளர் நாயகத்திடம் அல்லது அவரின் கீழ் உள்ள இடங்களில் உள்ள அதிகாரமளிக்கப்பட்ட பிரதி அல்லது உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் பதிவு செய்யும் உரித்தை வழங்குகிறது. பதிவு செய்வதன் நோக்கம் மோசடியை தவிர்ப்பதற்காகும். ஆனால் பதிவு செய்தல் கட்டாயமானதல்ல எனினும் வங்கி போன்ற பல நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட (**Registered**) அற்றோணித்தத்துவப் பத்திரத்தை மட்டுமே நம்பி ஏற்கின்றனர். அத்துடன் வெளிநாட்டில் நிறைவேற்றப்பட்ட அற்றோணித்தத்துவத்தை பதிவதால் மோசடிகள் இடம்பெறுவதை தவிர்க்கலாம். பதிவின் போது ஒரு நொத்தாரிசால் அற்றோணித் தத்துவத்தின் பிரதி ஒன்றில் அது உண்மைப் பிரதி (**True Copy**) என உறுதிப்படுத்தி, ஒரு சத்தியக் கடதாசியை (**Affidavit**) தத்துவப் பத்திரத்தை வைத்திருப்பவர் (**attorney**) ஒரு சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் (**Commission er for oaths**) முன்னிலையில் மேற்படி அற்றோணித்தத்துவப் பத்திரம் நேர்மையானதும் (**genuine**) இன்னும் வலுவில் உள்ளது (**still in force**) என்றும் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தி நிறைவேற்றி மேற்படி மூல அற்றோணித் தத்துவப் பத்திரம் (**Original**)உடன் உண்மைப் பிரதியையும், மேற்படி சத்தியக் கடதாசியையும், உண்மைப் பிரதியில் பதிவுக்கட்டணமாக ரூபா 03/75 சதம் முத்திரையுடன் பதிவுக்காக சமர்ப்பித்தால் பதிவாளர் நாயகம் திருப்திப்படுவதன் மேல் அதனை பதிவு செய்து மூலப் பிரதியை (**orginal**) திருப்பி வழங்குவார். ஏனையவற்றை உரிய பதிவுப் புத்தகத்தில் பதிந்து கோவையிடுவார். யாராவது அத்தாட்சிப் பிரதியை கேட்டால்(**Certified Copy**) அற்றோணித் தத்துவ கட்டளைச் சட்ட பிரிவு 03 இன் கீழ் பதியப்பட்ட அற்றோணித தத்துவப் பத்திர உண்மைப் பிரதியிலிருந்து 120 சொற்களுக்கு மேற்படாத ஒரு பக்கத்திற்கு 50 சதம் முத்திரைக் கட்டணத்துடன் அதனைப் பதிவாளர் நாயகம் வழங்க வேண்டும் என மேற்படி சட்டத்தின் பிரிவு 07 கூறுகிறது.

மேற்படி வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் உரிய செயலை செய்யத்தவறுமிடத்து தத்துவம் வழங்கியவர் (**Grantor**) அல்லது தத்துவம் பெற்றவர் (**Attorney**) அவ் பதியப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை பதிவினை இரத்துச் செய்வதற்காக பதிவாளர் நாயகத்திடம் ரூபா01/= முத்திரைக் கட்டணத்துடன் மேற்படி இருவரில் யாராவது ஒருவர் சத்தியக் கடதாசியை ஏன் அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்கிறார் என் பதற்கான காரணத்துடன் முடித்து பதிவினை இரத்துச் செய்வதற்காக சமர்ப்பிக்கலாம் (**For Cancellation**) இது மேற்படி சட்டத்தின் பிரிவு 04 இன் படி இரத்துச் செய்வது பற்றிய அறிவித்தலை வர்த்தமாணிப் பத்திரிகையிலும் (**Gazatte**) மேலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும மொழிகளிலும் வெளிவரும் தேசிய கொழும்பு பத்திரிகையில் மூன்று நாட்களுக்கு பிரசுரம் செய்யவேண்டும். அல்லாவிட்டால் அற்றோணித் தத்துவப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படாது. தத்துவம் பெற்றவரின் (**attorney**) செயல்களுக்கு தத்துவத்தை வழங்கியவர் (**Grantor**) பொறுப்பாவார். ஆனால் மேற்படி அறிவிப்பு இல்லாவிட்டாலும் சட்டத்தின் செயல்பாட்டால் அல்லது அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் படி தத்துவக்காரருடன் (**attorney**) தொடர்புள்ள கொடுக்கல் வாங்கல் மேற் கொள் ளும் எந்த ஒரு நபருக்கும் முறையான தடை அறிவித்தலை மேற்படி தத்துவப்பத்திரத்தை வழங்கியவர் (**Gra ntor**) வழங்கியிருப்பின் மேற்படி அற்றோணித் தத்துவப் பத்திரம் செல்லுபடியற்றது ஆவதைத் தடைசெய்யாது மேலும் அற்றோணித் தத்துவம் பத்திரத்தில் கூறப்பட்ட ஏற்பாடு(**Clause**), அடைப்புக்குறி ஏற்பாடு (**Proviso**) அல்லது நிபந்தனைகள் (**Condition**) நிறைவேற்றத் தவறு மிடத்து மேற்படி பத்திரம் செல்லுபடி-யற்றது. ஆவதையும் தடைசெய்யாது என மேற்படி சட்டத்தின் பிரிவு 04இன் 2ம் பந்தியில் கூறப்பட்டுள்ளது.

(தொடரும்..)

# மட்டு-அம்பாறையில் தொடர்ந்து கடும் மழை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில், நேற்றுமுன்தினமிரவு முதல் கடும் மழை பெய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அம்பாறை மாவட்டத்தில் பல தாழ்ந்த பிரதேசங்களில் மழைநீர் தேங்கி நிற்பதாகவும் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகின்றது.

நிந்தவூரை ஊடறுத்துச் செல்லும், மத்திய வாய்க்காலிலிருந்தும் வெள்ளம் பாய்வதால், இருமருங்கிலும் உள்ள வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிந்தவூர், சாய்ந்த மருது, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, திருக்கோயில், அக் கறைப்பற்று ஆகிய பிரதேசங்களில் தொடர்ந்து மழைபெய்து வருவதாகவும் கூறப்படுகிறது. - (க-61)

# அமைச்சர்களின் விஜயங்கள் கண்துடைப்பு நடவடிக்கைகளே

## அரியநேந்திரன் எம்.பி

(கிளிநொச்சி)

கடல் ஆழிப்பேரலை அழிவால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட வருகை தரும் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் கூட்டும் மாநாடுகளில் கலந்து கொள்வதில் எத்தகைய அர்த்தமும் இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடல் ஆழிப்பேரலை ஏற்பட்டு 20 நாட்கள் கடந்துவிட்ட நிலையில் அமைச்சர்கள் என்றும் பிரதியமைச்சர்கள் என்றும் கிழக்கிற்கு இருபதுக்கும் மேற்பட்டவர்கள் வந்து திரும்பியுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி நிவாரணங்கள் தொடர்பாக பல வாக்குறுதிகளையும் அளித்துள்ளார்கள்.

ஆனால் இதுவரை எந்தவொரு வாக்குறுதியும் நிறை வேற்றப்பட்டதாக இல்லை. இந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே இதனை மக்கள் கருதுகின்றார்கள்.

அதுமட்டுமன்றி தமிழ் மக்களையும் ஏமாற்றும் செயற்பாடாகவே இதனை நாம் கருத வேண்டியுள்ளது. இந்த நிலையில் இவர்களது வருகையில் கலந்து கொள்வதில், சந்திப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# ஊடகவியலாளர் பலரும் சுனாமியால் கடும் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பணிபுரியும் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட 20 ஊடகவியலாளர்கள் சுனாமி கடல் அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர 120 ஊடகவியலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் சுமார் 1000 பேர்வரை அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

உத்தியோகபூர்வ அறிக்கைகளுக்கமைய இவர்களுக்கு ஏற்பட்ட சேதம் 20 மில்லியன் ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாகாண ரீதியாகப் பணிபுரியும் 50 ஊடகவியலாளர்களின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தவிர,

53 கமராக்கள், 7 ரெலிவிசன் கமராக்கள், 5 கையடக்கத் தொலைபேசி,3 தொலைநகல் இயந்திரம், 16 கசற்றெக்கோடர், 11மோட்டார் சைக்கிள் , 3 சைக்கிள் என்பன சேதமடைந்துள்ளன.

மற்றும் 97 இணையத்தள செய்திகளைத் தினமும் வெளியிடும் 97 ஊடகவியலாளர்களும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# இத்தாலிவாழ் இலங்கையர்கள் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தாலியில உள்ள ரோம் பௌத்த விகாரையின் தேரவாத பௌத்த சங்கத்தினால் நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இத்தாலியில் வாழும் இலங்கையர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த நிவாரணப் பொருட்களில் பாடசாலை உபகரணங்கள், மருந்துப் பொருட்கள், ஆடைகள் என்பன அடங்கும்.

இவைதவிர மேற்படி சங்கத்தினரால் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு சுனாமி அனர்த்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென சுமார்-20கோடி செலவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-61)

# அரச சட்டத்திற்கு கட்டுப்படும் அவசியம் எமக்கு இல்லை

## புலித்தேவன் கருத்து

(கொழும்பு)

சுனாமிப் பேரலைகளால் கடந்த மாதம் ஏற்பட்ட பாதிப்புக்களை அடுத்து கடற்கரையோரங்களில் கட்டடங்களைக் கட்டுவது தொடர்பாக அரசு சில கட்டுப்பாடுகளை அறிவித்திருக்கின்றது.

நாட்டின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் கடற்கரை யில் இருந்து 100 மீற்றர் தூரம் வரை கட்டடங்கள் எழுப்ப கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பெருமளவில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் இருக்கும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடற்கரையில் இருந்து 200 மீற்றர்க்கு அப்பால் கட்டடங்களை அமைக்க முடியும் எனவும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர்,


கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பில் இலங்கையரசின் வரையறைகளுக்கு உட்பட வேண்டிய நிலையில் வடக்கு-கிழக்கு மக்கள் இல்லை என்று தெரிவித்தார்.

மக்களின் தேவைகளுக்கு அமைய விடுதலைப்புலிகள் கட்டடங்களை மீண்டும் கட்டுவது குறித்து முடிவெடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

# தமிழ்ப் பிரதேசங்களுக்கான மனிதாபிமானப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவது மிகவும் அவசியம்

## புத்திஜீவிகளுடனான சந்திப்பில் தலைவர் பிரபாகரன் வலியுறுத்து

(கிளிநொச்சி)




**அழிவுகளும் இழப்புக்களும் எமது மக்களுக்குப் பரிச்சயப்பட்டுப் போனவை. எனினும் சுனாமி ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட அதிகமான உயிரிழப்புக்களும் இடப்பெயர்வும் இயற்கையின் சீற்றத்தால் மிகவும் குறுகிய நேரத்தில் நிகழ்ந்ததென்ற வகையில் அதிர்ச்சியான தொன்றாக உள்ளது.**

**எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கு ஏற்றவகையிலான அனைத்து வேலைத்திட்டங்களும் மனிதாபிமானப் பணிகளும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவே இன்றைய முக்கிய தேவையாகுமென தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.**

"சுனாமி" அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக முன்வந்துள்ள புத்திஜீவிகளை நேற்று முன் தினம் காலை சந்தித்துக் கலந்துரையாடிய போதே தேசியத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திப்பில் கலந்துகொண்ட பல்வேறு நாடுகளில் இருந்து அங்கு வந்திருந்த தமிழ்ப் புத்திஜீவிகளை வரவேற்று அனர்த்த நெருக்கடியின்பின் உடனடியாக தாயகத்து மக்களுக்காக நாட்டிற்கு திரும்பி வந்து இரவு பகலாக பணியாற்றிக் கொண்டிருக்கும் அவர்களைப் பாராட்டிய தேசியத்தலைவர் எமது தேசம் இந்த அனர்த்தத்தின் விளைவிலிருந்து விரைவாக விடுபட எல்லாவிதமான வளங்களும். ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.



தேசியத் தலைவர் அங்கு உரையாற்றுகையில்,

கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளாலும் இராணுவ தந்திரோபாயங்களினாலும் எமது மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு இடம் பெயரவும் சொத்துக்களை இழக்கவும் நேரிட்டது. இது சர்வதேசமும் அறியப்படாமல் மௌனமாக எமது மக்களையும் தேசத்தையும் சிதைத்த முதலாவது ஆழிப்பேரலையாகக் காணப்படும் நிலையில் கடந்த 26ம் திகதி இடம்பெற்ற அனர்த்தம் எமது மக்களைப் பொறுத்தவரை இரண்டாவது ஆழிப்பேரலையே.

யுத்த காலத்தின் போதும் நெருக்கடியின் போதும் எம்மைப் பாதுகாத்த மக்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் துயரத்திற்குள்ளானபோது எமது இயக்கத்தின் வளங்கள் யாவும் மக்களுக்காகவே உடனடியாகத் திருப்பப்பட்டு அவர்களது மீட்பு மற்றும் துயர்துடைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது எங்கள் முன் உள்ள சவால், எமது மக்களின் துயர்களைத் துடைப்பதும் அவர்களைத் துரிதகதியில் இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச்செல்வதன் மூலம் மக்கள் அடைந்துள்ள அதிர்ச்சியிலிருந்து விடுவிப்பதுமேயாகும். அதிலும் குறிப்பாக எமது குழந்தைகள், இளம் சிறார்கள் ஆகியோர் மிக மோசமான அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். இவ்வனர்த்தத்தின் பின் அவர்களது உளநலத்தில் கூடிய அக்கறை கொள்ளவேண்டியது எங்களது முன்னுரிமையாகவுள்ளது. மரபுரீதியான அணுகுமுறைகளை விடுத்து எமது குழந்தைகளை விரைவாக மகிழ்ச்சிகரமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லக் கூடிய புறச்சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியுள்ளது. விளையாட்டு மைதானங்கள், மகிழ்ச்சிகரமான பாடசாலைச் சூழல் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் அவர்கள் அடைந்த அதிர்ச்சி அனுபவத்திலிருந்து அவர்களை விடுவிக்கமுடியும். யுத்தத்தின் போதும் யுத்தம் சார்ந்த சிறிலங்கா அரசின் நெருக்கடிகளினாலும் கடற்றொழில் வாய்ப்புக்களை இழந்துபோன எமது மக்களின் சமூக பொருளாதார நிலைமை தற்போது நிலவும் யுத்தமற்ற காலத்தில் ஓரளவிற்கு முன்னோக்கி நகர முற்பாலும் அதுவும் தற்பொழுது இழக்கப்பட்ட வாய்ப்பாக மாறியுள்ளது.

இந்நிலையில் கடந்த காலத்தில் எமது அமைப்பினால் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கென வழங்கப்பட்ட அனைத்து சமூக மேம்பாட்டுக் கடன்களையும் உடனடியாக இரத்துச் செய்வதாகத் தீர்மானித்துள்ளோம். அதே வேளையில் அவர்களுடைய வாழ்க்கையில் விரைவான மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகத் துரிதப்படுத்தப்பட்ட முயற்சிகளினை மேற்கொள்ளுமாறு நான் உங்களையும் புலம்பெயர் நாடுகளில் வாழுகின்ற அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் வருமான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குதல் மற்றும் தனிப்பட்ட முறையிலும் நிறுவன ரீதியாகவும் உடனடியாக முன்னெடுப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சர்வதேச உதவிகள் வரும்வரை காத்திராமல் எமது மக்களின் வாழ்க்கையில் எங்களால் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

எமது மக்கள் இந்த அனர்த்தத்தின் பின் நிவாரணங்களில் தங்கிவாழும் ஒரு சமூகமாக மாற்றப்படாமல் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் தங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பக் கூடிய திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கடைப்பிடிக்கப்படும் கல்வி முறைமை தேசத்திற்கானதோ வாழ்க்கைக்கானதோ கல்வியாக அமையாமல் ஓர் குறிப்பிட்ட உத்தியோகம் நோக்கிய க்ல்வியாக அமைவது சிதைவுகளில் இருந்து மீளெழும்பும் சமூகத்திற்குப் பொருத்தமற்ற அணுகுமுறையாகவே உள்ளது. என்வே கூடிய கவனத்தை இளம் சமூகத்தின் தொழிற்றிறன் மேம்பாடு நோக்கியும் திசைதிருப்ப வேண்டியுள்ளது.

நாங்கள் எதிர்நோக்கியுள்ள பாரியளவு கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டியிருப்பதோடு அவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் எமது மனிதவளம் பயிற்றுவிக்கப்படவேண்டியுள்ளது. அதற்கேற்ற முறையில் விரைவாக தொழிற்றிறன் பயிற்சிநெறிகள் அடையாளம் கண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

புனரமைப்பும் அபிவிருத்தியும் பாரியளவில் முன்னெடுக்கப்படும் தேசத்தில் எதிர்நோக்கப்படும் மற்றுமோர் சவால். இயற்கை வளங்களை எவ்வாறு சிறப்பான முறையில் பயன்படுத்துவதென்பதேயாகும். எமது மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வளங்களை அதன் நீடித்த பயன்பாட்டிற்குப் பங்கம்வராமல் பயன்படுத்துவதோடு மாற்று வளங்களையும் பொருத்தமான தொழில்நுட்பங்களையும் அடையாளம் கண்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதன் மூலம் இயற்கை வளங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு சேதமற்றமுறையில் கையளிக்கமுடியும்.

கரையோரங்கள் இயற்கை அனர்த்தங்களின் இலக்குகளாக இருப்பதனால் அவற்றின் பாதுகாப்பும் வளப்படுத்தலும் மிகமுக்கியமான விடயமாக கவனத்திற்கொள்ளப்பட்டு சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

கலந்துரையாடலின் போது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல், குடிநீர் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்திய தலைவர், எந்தவொரு சூழலிலும் மக்கள் சுகாதார ரீதியான சீர்கேடுகளுக்கோ தொற்றுநோய்களுக்கோ உள்ளாகாமல் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தமைக்காக அனைத்து வைத்தியர்களுக்கும், விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினருக்கும், சுகாதார சேவையினருக்கும் தனது பாராட்டைத் தெரிவித்ததோடு தொடர்ச்சியாக அந்நிலையைப் பேணுமாறும் கேட்டுக் கொண்டார். (ற)

# துயர்துடைக்கும் பணிகளுக்கு படையினர் தடைபோடக்கூடாது!

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியற்துறையினருக்கும் இலங்கை இராணுவத்தினரின் மட்டக்களப்பு மாவட்ட உயர்மட்ட அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன் தினம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் இந்தப் பணி எவ்வித தடங்கலுமின்றி நடைபெறுவதற்கு அரசாங்க பாதுகாப்புப் படையினர் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளினால் வலியுறுத்தப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட இராணுவ அதிகாரிகள் இக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் இந்தப்பணி எவ்வித தடையுமின்றி தொடர்வதற்கு தங்களாலான பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுவதோடு, இது தொடர்பான பணிப்புரை சகல அதிகாரிகளுக்கும் விடுக்கப்படும் என்றும் உறுதியளித்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளரும், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிக்குழுவின் மாவட்ட இணைப்பாளருமான தயாமோகன், புளியந்தீவு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன், பட்டிருப்பு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வன், குடும்பிமலைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் புகழன், மாவட்ட அரசியற்துறை செயலக இணைப்பாளர் மனோஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். இலங்கை இராணுவத் தரப்பில் 233வது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் எல். ஆர்.அமரதுங்க, 552வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் எல்.வலகம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ப)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் தையல் போதனா ஆசிரியர்களுக்கான கழிவுப் பொருட்களை கைவினைப் பொருட்களாக மாற்றுவது சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் கடந்த 16ஆம் திகதி முதல் யாழ்ப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இப் பயிற்சி வகுப்புக்களை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட விரிவுரையாளர் சின்னத்துரை சண்முகராஜா மேற்கொண்டுள்ளார்.

எனவே, இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளாத தையல் போதனாசிரியர்களை தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு கிராமிய அபிவிருத்தித் திணைக்கள இணைப்பாளர் கேட்டுள்ளார். (ற-5)

# அறிவியல் மேம்பாட்டில் புத்தாக்கத்திறனியல்

①

அருட்திரு. இராசேந்திரம் ஸ்ரலின்

## அறிமுகம்

புத்தாக்கத்திறன் என்பது உளச்செயல் உளவியலின் (Cognitive Psychology) முக்கிய அம்சமாக விளங்குகின்றது. இதனை படைப்பாற்றல், ஆக்கத்திறன் எனவும் அழைப்பதுண்டு. இத்துறையைப பிரபல்யப்படுத்திய பெருமை மோல்ரா (Malta) தீவைச் சார்ந்த எட்வேட் டீ போனோவையே (Edward deBono) சாரும. இவர் புத்தாக்கச் சிந்தனைபற்றி உலகில் பல பாகங்களில் பயிற்சியும அளித்து வந்துள்ளார். புத்தாக்கத்திறன் பற்றி உளவியலாளர்கள் பின்வரும் வினாககளுக்கு விடைகாண முயல்கின்றனர்.

* புத்தாக்கத்திறன் கொண்டோரின் ஆளுமைப் பண்புகள் எவை?
* புத்தாக்கத்திறனை வளர்ப்பதல் செல்வாக்குச் செலுத்தும் அக, புறக் காரணிகள் எவை?
* புத்தாக்கத்திறனின் உருவாகல் நிலைகள் எவை?
* புததாக்கத்திறனை வளர்ப்பது எப்படி?

## புத்தாக்கத் திறன் வரைவிலக்கணங்கள்

* செயல்களை அல்லது எண்ணங்களை புதிய முறையில் இணைத்தலே புத்தாக்கத்திறனாகும் என்பது பலரின் வரைவிலக்கணமாகும். (Glover, Ronning & Reynolds,1989: Isaken & Murdock, 1993; Smith, Ward Finke,1995 in Robert S.Feldman P.233).
* கடந்தகால அனுபவங்களை ஒரு புதிய வடிவத்தில் ஒழுங்கு செய்தலே புத்தாக்கத்திறனாகும் என்பது மற்றொரு வரைவிலக்கணமாகும்.
* ஒன்றைப் புதிதாக அல்லது வித்தியாசமாகப் படைக்கும் திறன் என்பது நுண்ணாலியின் (Nunnally,1970) வரைவிலக்கணமாகும்.
* புத்தக அறிவில் தங்கியிராது புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்தல் என்பது இன்னொன்று.

இவற்றைத் தொகுத்து வரைவிலக்கணம் அமைப்பதாயின் புத்தாக்கத்திறன் என்பது சுய அறிவினால், கடந்தகால அனுபவங்கள், செயல்கள் அல்லது எண்ணங்கள் என்பனவற்றை புதியமுறையில் இணைத்து, புதிதாக அல்லது வித்தியாசமாக ஒன்றைக் கண்டறிதல் அல்லது ஆக்கல் எனலாம்.

## புத்தாக்குனர்களின் ஆளுமைப்பண்புகள்

கீழே தரப்பட்டுள்ளவற்றில் அதிகமானவை உளநிலைப் பண்புகள் பற்றியே சுட்டிக்காட்டுகின்றன. வேர்ஜிலியோ என்றிக்கஸ் , குவான்சென் (Virgilio Enriquez &Guanzon, 1985) ஆகியோரின் கருத்துப்படி புத்தாக்கத்திறன் கொண்டோர் பின்வரும் பண்புகளைக்கொண்டிருப்பர்.

* தெளிவற்ற ஒரு விடயம் அல்லது நிகழ்வு பற்றிப் பொறுமை காத்தல்.
* செயலைச் செய்வதற்குப் பிறரின் கருத்துக்காகக் காத்திருப்பதில்லை. அதாவது தன் சொந்த எண்ணத்தின்படி செயற்படும் தன்மை.
* சமூக நிகழ்வில் பங்குகொள்வ்தில் விருப்பின்மை.
* பொருள் ஆக்கலில் புதிய வடிவம், பாணி என்பன கொண்டிருத்தல்.
* பிறர் பரிகசித்தாலும் தான் எடுத்த காரியத்தைச் செய்துமுடிப்பதில் திருப்தி காணல்.

மியர்ணா பாசாவோவின் கருத்துப்படி (Myrna Pasao) புத்தாக்குனர்களில் பின்வரும் அம்சங்கள் காணப்படும்.

* இலகுவாகச் செய்யும் ஆற்றல் (Fluency): ஒரு பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் மொத்த எண்ணிக்கையை இது குறிக்கும் அதிக எண்ணிக்கை அதிக ஆற்றல்.
* தனித்துவம் (Originality): பரிந்துரை எவ்வளவிற்கு புதுமைத்தன்மையும், மரபுக்கு மாறானதாகவும் இருத்தலைக் குறிக்கும்.
* புரிந்துணர் திறன் (Sensitivity).
* விடாமுயற்சி (Perseverence).
* டெலாஸ், கெய்யர் (Dellas &Gaier, 1970) பின்வரும் விடயங்களை முன்னுரிமைப்படுத்திக் கூறுகின்றனர்.
* வழமைக்கு மாறானதும் (Unconventional) பொருத்தமானதுமான (Appropriate) கருத்துக்களை அல்லது எண்ணங்களை உருவாக்கும் திறன்.
* அபார நினைவாற்றலும் தன் கடந்தகால வாழ்க்கை அனுபவங்களை எளிதில் மனக்கண்முன் கொண்டுவரக் கூடிய ஆற்றலும்.
* சிந்தனைத் திறனும் ஒன்றோடொன்று தொடர்பற்றவை போன்று காணப்படும் எண்ணங்களிடையேயுமுள்ள தொடர்பினை அடையாளம் கண்டு தொகுத்தளிக்கும் ஆற்றல்.
* தேர்ந்தெடுத்து அவதானிக்கும் திறன்.
* எண்ணங்களை பொருத்தமான முறையில் மாற்றியமைப்பதில் நெகிழ்ச்சித் தன்மை.

அத்தோடு பிரச்சினை தீர்த்தல், தீர்மானம் எடுத்தல் என்பவற்றில் அச்சமின்றித் துணிச்சலான முடிவுகள் எடுப்பர். அத்தகைய துணிச்சலான முடிவுகளை பிரச்சினையைத் தீர்க்கவல்ல ஒன்றை உருவாக்குவதற்காகவே மேற்கொள்வர். மேலும் புத்தாக்குனர்கள் ஒன்றை இன்னும் சிறப்பானதாக்க வேண்டும் என்ற தேவையை உணர்ந்து அதை மாற்றியமைக்கும் ஊக்கியாகச் செயற்படுவர். அததோடு புதியன கண்டுபிடிக்கும் தமது ஆற்றலையும், தனித்துவத்தையும், தம் சுதந்திரத்தையும் விலியுறுத்தி நிற்பர் (E.Paul Torrance 1972).

என்றிக்கஸ், அல்மொன்ரே (Enriquez & Alnonte, 1973) புத்தாக்கத்திறன் பற்றி பிலிப்பைன்ஸ் மக்கள் கொண்டுள்ள கருத்து பற்றிய ஆய்வின் மூலம் புத்தாக்குனர்கள'ல் பின்வரும் ஆளுமைப் பண்புகளை அடையாளம் கண்டனர்.

* கற்பனை வளம் கொண்டிருத்தல் (Imaginative).
* புதிய கருத்துக்களை முன்வைக்கும் ஆற்ழல் (Ablity to give new ideas).
* நுண்ணறிவுடையராயிருத்தல் (Intelligent).
* புதியன அறியும் ஆவல் கொண்டிருத்தல் (Inquisitive).
* புதியன படைக்கும் தன்மைகொண்டிருத்தல் (Innovative).
* அலசி ஆராயும் தன்மையுடையவராயிருத்தல் (Analytical).
* அகத்துள் நோக்கும் பண்பு கொண்டிருத்தல் (Introspective).
* அழகியலுணர்வுடையோராயிருத்தல் (Have an aesthetic sense).
* மரபுமுறை கடந்து சிந்தித்துச் செயற்படும் தன்மை (Unconventional).
* கூர்மையான புரிநதுணர்வு (Sensitive).

மேலும் ட்றுடால், பாறோன், கற்றேல் (Dreudahl.1956 :Barron.1963: Catel & Dreudahl,1955) போன்றோரின ஆய்வுகள் புத்தாக்குனரின் வேறு பண்புகளை வெளிப்படுத்தின.

* மிகக் கூர்மையான புரிந்துணர்வு
* ஒதுங்கியிருத்தல்
* உளத்தடைகள்
* தீவிரத்தன்மை
* சுதந்திரப் போக்கு
* உடல்பதட்டம்

றோ (Roe 1963) வின் கருத்துப்படி புத்தாக்குனர்கள் தம் அனுபவங்கள் பற்றித் திறந்த மனப்பான்மை கொண்டிருப்பதோடு, உயர்ந்த புலக்காட்சியும், அதீத அறிதல் அவாவும், சிக்கலானவை மட்டில் நாட்டமும் கொண்டு விளங்குவர். றிச்மொண்ட்டின் அவதானிப்பின்படி புத்தாக்குனர்கள் தம் வாழ்வைத் தாமே கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் போக்குள்ளவர்கள் (Self-dirctive). பிறரால் வழிநடத்தப்படுபவர்களாக விளங்குவதில்லை.

மேலும், யேகஸ (Jesus.1968) பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக ஆண் மாணவர்களிடையே மேற்கொண்ட ஆய்வில் தம்மை உள்ளபடியே ஏற்கும் பண்புள்ளவர்கள் அது இல்லாதவர்களை விட புத்தாக்கத்திறன் நிறைந்து விளங்கினர் எனக கண்டறிந்தார்.

புத்தாக்குனர்களின் தனிச் சிறப்புப் பற்றிக் கூறும்போது அவர்கள் ஒரு பிரச்சினையில் மற்றவர்கள் பார்க்கத் தவறிய விடயங்கள் காணும் ஆற்றல் கொண்டிருப்பர். அத்தோடு எதையும் அதிகம் விமர்சித்துப் பார்க்கும் தன்மையுடையவர்களாகவும் விளங்குவர். காரணம் இவர்கள் எளிதில் குறைகளையும் செழுமைப்படுத்த வேண்டியவற்றையும் இலகுவாக வேறுபடுத்திப் பார்க்கக்கூடியவர்களாகக் காணப்படுவர். அத்தோடு பழக்கப்பட்ட எதனுடனும் தொடர்ந்து வாழ்வதை இவர்கள் விரும்புவதில்லை. தம்மைச் சூழவுள்ளவற்றை மாற்றி அமைத்துச் சிறப்பாக்குவதில் இவர்கள் கவனம் செலுத்துவர் (Go, Fernando, & Ong latco). இப்பண்புகள் காரணமாக இவர்கள் பிறரால் எளிதில் புரிந்துகொள்ளப்படுவதில்லை.

வல்லாக், குகன் (Wallack and Kugan.1965) ஆகியோரின் ஆய்வில் புத்தாக்குனர்கள் மனத்தைரியம், சுயகட்டுப்பாடு என்பன அதிகம் கொண்டவர்கள் என்பது தெளிவானது. இவர்கள் உயர்வான சுயமதிப்பீடும் அதிக தன்னம்பிக்கை கொண்டும் காணப்பட்டனர்.

பின்சின (Finch) ஆய்வில் சமூக ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் இசைவாக்கமடையாத சிறுவர்கள், இசைவாக்கம் அடைந்த சிறுவர்களைவிட அதிக புத்தாக்கத்திறன் கொண்டவர்கள் என்பது வெளிப்பட்டது. தனித்துவம், இலகுவாகச் செயலாற்றும் திறன் என்பவற்றில் இவர்கள் சிறந்து காணப்பட்டனர். அதேவேளை, நெகிழ்ச்சித்தன்மையை குறைவாகக் கொண்டிருந்தனர். இவரின் கருத்தின் அடிப்படையில் இத்தகைய ஆளுமைக் குறைபாடுகள் கொண்டவர்களை ஏனையோர் ஒதுக்கித் தள்ளிவடாது அவர்களிலுள்ள புத்தாக்கத்திறனை அவர்கள் அடையாளம் காணவைத்து அவர்களை உயர்ந்த மனிதர்களாக மாற்றும் கடமை பெற்றோருக்கும் கற்பிப்போருக்கும உருவாககுனர்களுக்கும் உண்டு.

ஏனைய ஆண்களைவிடப் புத்தாக்கத்திறன் கொண்ட ஆண்கள் பெண்மைத் தன்மையும் கூர்மையான புரிந்துணர்வும் கொண்டு காணப்பட்டனர். அதேவேளை ஏனைய பெண்களை விட புத்தாக்கத் திறனுடைய பெண்கள் ஆண்மைத் தன்மையும் சுதந்திரப் போக்கும் கூடியவர்களாகக் காண்ப்படடனர். (Barron, 1957; Mackinnon, 1965; Roe, 1946; Torranc, 1962,1963)

மேற்குறிப்பிட்ட ஆய்வு வெளிப்பாடுகள், பெற்றோர் தம் பிள்ளைகளிலும், கற்பிப்போர் தம் மாணவர்களிலும் உருவாக்குனர்கள் உருவாகுவோரிடம் உள்ள புத்தாக்க உளநிலைப் பண்புகளை அடையாளம் கண்டு, அவர்களில் மறைந்துள்ள அல்லது வெளிப்பட்டு நிற்கும் புத்தாக்கத்திறன்களை வளர்ப்பதற்கான சூழலை அமைத்துக் கொடுப்பதும் ஊக்கம் கொடுத்தலும் அவசியம். தம் மாணவர்களின் புத்தாக்கத்திறனைக் கண்டு பாராட்டி வளர்ப்பவர்களே ஆரோக்கியமான சமுதாயம் உருவாக உதவும் உன்னத கற்பிப்போராவர்.

வரலாற்றில் போற்றப்படுபவர்கள் மாறாக அவர்களிலிலுள்ள புத்தாக்கப் படைப்புகளைத் தமதெனக் காட்டிக் கொள்வதும், அவர்களின் புத்தாக்கத்திறனை மழுங்கடித்து அழிக்கும் முயற்சியில் ஈடுபடுதலும் இளம் புத்தாக்குனர்க்கும், தமக்கும், சமுதாயத்துக்கும் இழைக்கும் அநீதியாகக் கணிக்கப்படவேண்டும்.

## புத்தாக்கத்திறன் உருவாக்கும் படிநிலைகள்

1. *பிரச்சினை வரையறை செய்தல்* (Orientation): இந்நிலையில் பிரச்சினை என்ன என்பது பற்றி தெளிவாக வரையறை செய்யப்படும். அப்பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்கள் அடையாளம் காணப்படும்.

2. *ஆரம்ப முயற்சி* (Primary Work): புத்தாக்குனர் அவசியமான இவ்வாரம்ப நிலையில், கண்டுபிடிக்க விரும்பும் விடயம் பற்றிய பல தகவல்களையும், நுட்பங்களையும் அறிதலில் ஈடுபடுவர்.

3. *இயங்கியல் அமைதி* (Quiescence): இந்நிலை ஒரு வகையில் அமைதியானதாகத் தோன்றினும் உள நிகழ்வுகளைப் பொறுத்தவரையில் இயக்கியல் தன்மை கொண்டு விளங்கும். இதனை கருக்கட்டல் நிலை (Incubation or Gestation) அல்லது புத்தறிவாக்கல் நிலை எனவும் குறிப்பிடலாம். ஆரம்ப முயற்சியில் உள்வாங்கப்பட்ட விடயங்களிடையே கலப்புச் செய்தல்கள் உபமனதுள் (Pre-conscious mind or Sub-coscious Mind) நிகழ்ந்து கொண்டேயிருக்கும். தேர் செய்யும் திறமையான ஆசாரியர்கள் தாம் உருவாக்க உள்ள தேரை மனதில் தியானித்த வண்ணம் இருப்பதும், விரதம், பூசை என்பவற்றில் ஈடுபடுதலும் தமிழர்கள் மத்தியில் காணும் ஓர் புத்தாக்க நிலையயே.

4. *புத்தறிவு வெளிப்படு நிலை* (Inspiration or Illumination): இந்நிலையில் புத்தாக்கம் செய்யமுயலும் விடயம் பற்றிய புத்தறிவு அவர் மனத்திரையில் மின்னலெனப் பளிச்சிடும். அத்துடன் கண்டுபிடித்துவிட்டேன் எனும் மகிழ்வு நிலையும் சேர்ந்து காணப்படும். ஆக்கிமிடிஸ் தங்கத்தில் இருப்பது உண்மையான தங்கமா கலப்பா என்ற பிரச்ச'னை பற்றி யோசித்துவிட்டு சற்று அதறகு ஓய்வு கொடுத்துவிட்டு இருந்தார். ஒருநாள் குளியலறை தொட்டியில் தன் உடல் அமிழும் போது வெளிப்பட்ட நீரின் அளவைக் கொண்டு விடையைத் திடீரெனக் கண்டவுடன் யுரேக்கா யுரேக்கா என்று மகிழ்வோடு மெய்மறந்து நிர்வாணமாக கிரேக்க வீதி வழியே ஓடியது.

(தொடரும்)

# யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 2ஆம் மருத்துவமாணி பரீட்சை முடிவுகள்

கடந்த 2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம நடைபெற்ற யாழ பல்கலைக்கழக 2ஆம் மருத்துவ மாணி (**SECOND M.B.B.S. EXAMINATION**) 25ஆம் 26ஆம அணிக ளுக்கான பரீட்சை முடிவுகள் வெளி யாகியுள்ளன.

இப்பரீட்சையில் 25ஆம் அணியில் முதலாம் வகுப்பில் (**FIRST CLASS**) 4பேரும், இரண் டாம் வகுப்பு அப்பர் டிவிஷனில் (**SECOND CLASS UPPER DIVISION**) 5பேரும், **SECOND CLASS (LOWER DIVISION)**இல் 13 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

25ஆம் அணியில் 25 பேர் நூன சித்தியும், 12 பேர் **FATTED** சித்தியும் பெற்றுள்ளனர்.

26ஆம் அணியில் **SECOND CLASS ( UPPER DIVISION)** இல் 5பேரும், **SECOND CLASS (LOWER DIVISION)** இல் 15 பேரும் சித்தியடைந்துள்ளனர். 19 பேர் நூனசித்தியும், 9பேர் **FATTER** சித்தியும் பெற்றுள்ளனர்.

25ஆம் அணியில் சாதாரண சித்தி பெற்றோர் 48 பேர். 26ஆம் அணியில் 26பேர்.

இவ்விரு அணிகளிலும் சித்திபெற்றோர் விபரம்:

## 25ஆம் அணி

### FIRST CLASS

செல்வி பி.ஜேன் சங்கீதா, திரு.ஈ. ஜே.புஷ்பகாந்தன், செல்வி.எஸ். சிவரஞ்சனி, செல்வி.எஸ்.சுகன்யா.

### SECOND CLASS ( UPPER DIVISION)

செல்வி.கே.காயத்திரி, செல்வி. ஆர்.ஜனா, செல்வி.ஆர்.ராஜந்தி, திரு.ரி.சுகந்தன், திரு.எஸ்.ஸ்கந்தன்.

### SECOND CLASS ( LOWER DIVISION)

திரு.பி.ஏ.டொனால்ட் ரூபகன், செல்வி.பி.கீதா, திரு.ஜே.ஜான்சன், திரு.எஸ்.கார்த்திகன், செல்வி.பி.கிரு பாவினி, திரு.பி.நிஷாகன், திரு.பி.நிஷ் காந்தன், செல்வி.பி.பத்மபிரியா, செல்வி.எம்.ரமாஜினி, திரு.எஸ்.சசி குமார், திரு.எஸ்.சிவச்சந்திரன், திரு. எஸ்.சிறிநிலானந்தன், திரு.எஸ்.திரு வேரகன்.

### சித்தி

எல்.எம்.அன்ரோ ரஜீவ், செல்வி.எஸ்.அரின்சிகை, செல்வி.ஜ. அருந்தினி, திரு.ரி.பாஸ்கரநாதன், செல்வி.பி.பிரிந்தா, திரு.கே.சேந்தன், திரு.யூ.கோபி, திரு.ஜீகார்த்திக், திரு.ரி. ஜனார்த்தனன், திரு.வி.ஜெயதினேஷ், திரு.பி.ஜெயவர்ணன், திரு.ரி.கிருபேந்தி ரன், செல்வி.எம்.லோஜிதா, செல்வி. எஸ்.மாதுரிகா,திரு.என்.மதுசூதனன், திரு.எஸ்.நளீதன், திரு..ஜீ.பகீரதன், திரு.பி.பிரதாபன், திரு.எஸ்.பிரேம்குமார், திரு.கே.ராகுலன், திரு.எம்.ராஜ்குமார், செல்வி எஸ்.ரோஜிதா, திரு.என்.சகதி ராஜ், திரு.என்.சத்யசங்கரன், திரு.ஜீ. சேந்தன், செல்வி.ஏ.இயாஸினி, திரு.எஸ். சிஜீதரா, செல்வி.எஸ்.சுபோதினி, திரு. ஆர்.சுரேஸ்குமார், செல்வி.ரி.தாரணி, திரு.ஜீ.திவ்வியானந்த், திரு.டி.துஷ்யந் தன், செல்வி.கே.வாசுகி, திரு.வி.விஜி தரன், திரு.டி.சமிந்தா பிரேமலால், திரு.ஈ.எம. சமிந்தசம்பத் எதிரிசிங்க, திரு.யூ.எச்.ஜே.பிரசன்னா தயாரத்ன, திரு.எஸ்.கஜீலன், செல்வி.எம்.கீரத் திகா தசரங்கனி, செல்வி.ஜே.நிலாந்தி பிரியதர்சினி இந்திகா, திரு.எஸ். ஹர்சனா சேனாநாயக்க, செல்வி.ஆர். ஏ.தாரணி நர்மதா ரணதுங்க, செல்வி. எம்.யுடானி, செல்வி எம்.துவாரகா, திரு.எஸ்.தேவகுமார், திரு.ஆர்.கௌ தமன், திரு.ரி.செந்த்வரன், திரு.எம். சுரேந்திரன்.

### நூன்சித்தி

திரு.ரி.அருளன், திரு.வி.ஜங் கரன், செல்வி ஜே.ஜனிதா, திரு. ஜே.மிதுன்ராஜ்,செல்வி.எஸ்.நிரேகா செல்வி.பி.நிஷாந்தி, செல்வி.ஆர்.

## 25ஆம் 26ஆம் அணி

பிரிசசி, திரு.ஏ.சதீஸ்குமார், திரு.ஜீ. செந்தூரன், திரு.எஸ்.சுஜேந்திரன், திரு.என்.தரணிதரன், திரு.எஸ்.துஸ்ஸன், திரு.எஸ்.துஸ்சனன், திரு.எஸ்.தேவ குமார், செல்வி.என்.திருமகள், திரு.பி. எஸ்.சமிந்த சம்பத் ஜோதிரத்ன, செல்வி.டப்ளியூ.எல்.கஷீஸனி சாதுரிகா, செல்வி.ஜே.லோஷாரங்கனி சாம ந்தி, திரு. எம்.ஜி.யசந்த பியசேன, திரு.எஸ்.டி.சமிந்த பிரேமி திசா நாயக்க, திரு.எஸ்.ரீமாடாசன், செல்வி. டி.எஸ்.தல்பே மிரிஞ்சிகா சோஷினி, திரு.வி.ராகுலன், செல்வி. எஸ். நிவேதா.

### FATTED

செல்வி.கே.அனிதா, திரு.எம். மயூரன, திரு.கி.ரீஜன் நிசாந்தன் டயஸ், திரு.கே.சுசந்திரன், திரு.எம். சுதன், திரு.ஏ.துஷ்யந்தன், திரு.பியூ. ஏ.சாதுரா ஹரிந்திரா, திரு.கே.ஹ சந்த, செல்வி.ஏ.இரோஸா, திரு.எச். எம்.புத்திகா அசிரி முனசிங்க, திரு. டப்ளியூ.தூஷிதா ரோகணா, திரு. ஜீ.வசந்தகுமார்.

## 26ஆம் அணி

### FIRST DIVISION

இல்லை

### SECOND DIVISION (UPPER DIVISION)

திரு.எம்.ஆதவன், செல்வி.கே. பாலவள்ளி, திரு.ஜே.ஹைரின் ஆர்க், திரு.ஜே.ஜோசப் தனேந்திரன், செல்வி. கே.தமயந்தி.

### SECOND CLASS (LOWER DIVISION)

திரு.ஏ.அருட்செல்வன், திரு.எஸ். அருணன், திரு.எஸ்.கஜேந்திரன், திரு.ரி.ஜெயகாந்த், திரு.ரி.கலைமதி, செல்வி.வி.லாவண்யா, செல்வி. கே.நிரஜா, செல்வி.எஸ்.பிரதீபா, செல்வி.பி.பிரசாந்தி, திரு.என். பிர தீப், செல்வி.பி.பிரமிளா, திரு.ஏ.ரவி கரன், திரு.பி.சசிகரன், செல்வி.பி.சிவ சக்தி, திரு.கே.சுமன்.

### சித்தி

திரு.ஆர்.அகிலன், செல்வி. எம்.ஆரணி, திரு.ரி.பாலகுமாரன், செல்வி.ஜே.கார்த்திகா, செல்வி. எஸ். கலைச்செல்வி. செல்வி.கே. கலை வாணி, திரு.ஜே.கபிலன், செல்வி பி.கீதாரணி, திரு.ஏ.கிரிசங்கர், திரு. ஆர்.முரளிதரன், செல்வி.பி.நந்தினி, செல்வி.எஸ்.நித்தியா, திரு.கே.பிர தீபன், செல்வி.பி.பிரதீபா, திரு.பி. பிரசாந்தன், செல்வி.எஸ்.பிரியசர்மிளா, திரு.பி.சயந்தன், செல்வி.எம்.சர்மினி, செல்வி.எஸ்.சண்முகப்பிரியா, செல்வி. விசர்மினி, செல்வி.எம்.சோபிதா, செல்வி. எஸ்.சுகந்தினி, திரு.ரி.சுந்தரகுமார், திரு.ஆர். சுதர்சன, திரு.எம். வாசுதே சன், செல்வி.கே.விஷ்ணுவேணி.

### நூன சித்தி

திரு.எம்.அன்ரன் சுதாகரன், திரு.பி.அரவிந்தன், திரு.என்.ஹெ ரால்ட் தாமேந்திரன், திரு.வி.ஜெய தாஸ், திரு.ஜே.யூலியஸ் நிசாந்தன், திரு.வி.கிருஷாந்தன், திரு.ரி. மிரு ணாளன், திரு.பி.நிருத்தரன், திரு.என். நிஸாஸன், திரு.எஸ்.பிரஷாந்,திரு.வை. பிரசாந்தன், திரு.பி.பிரியதாஸன், திரு என்சசிகரன், செல்வி.எஸ்.சிவதர்ஷனா, செல்வி.பி.தீபனா, திரு.வைதீஸ்குமார், திரு.கே.வேணுகோபன், திரு. எனகரி காலன், திரு.எம்.கமலதாஸன்.

### FATTED

திரு.கே.தினேஸ், திரு.எஸ். குண தீசன், திரு.எம்.ரமணன், திரு.ஆர். சிவரூபன், திரு.எஸ்.சிவரூபன், திரு.ரி. சுகாயனன், செல்வி.ஆர். தருஷியா, திரு.ரி.சயாஷ், திரு.கே.பிரதீபன். (து-95)

---

பாதிக்கப்பட்ட முல்லை மக்களுக்கு

# சுவாமி சித்ரூபானந்தா உதவு பொருட்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தால் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுவாமி சித்ரூபானந்தா உதவு பொருட்களை வழங்கியுள் ளார்.

அண்மையில் யாழ். குடாநாட்டு க்கு விஜயம் செய்த இந்திய உயர் ஸ்தானிகர் நிருபாமராவ் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென 19 தொன் உதவு பொருட்களை கைய ளித்தார்.

இப்பொருட்களில் ஒரு தொகுதியே கடந்த ஞாயிற்றுக்கிழமை சுனாமி யால் பாதிக்கப்பட்டு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தங் கியுள்ள மக்களுக்கு வழங்கப்பட் டன.

மேற்படி பாடசாலையில் தங் கியுள்ள 2ஆயிரத்து 315 குடும் பங்களுக்கு மருந்துப்பொருட்கள், பால்மா வகைகள், உடுபுடவைகள் மற்றும் கூரை விரிப்புகள் உட்படப் பல பொருட்கள் வழங்கப்பட்டன.

மேற்படி பொருட்களைக் கையளிப்பதற்காக சுவாமி சித்ரூ பானந்தாவுடன், யாழ். மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜி லிங்கமும், வன்னி மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் கனகரட்ணமும் அங்கு சென்றிருந்தனர்.

இவர்கள் சுனாமியால் பாதிக் கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் உதவு பொருட்களை யும் வழங்கினர்.

அத்துடன் வழங்கப்பட்ட மேற் படி பொருட்களை யாழ்.வேம்படி மக ளிர் உயர்தரப் பாடசாலை மாணவி கள் வகைப்படுத்தி ஒழுங்குபடுத்தி தமது பங்களிப்பினையும் வழங்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# உறவிழந்த பிஞ்சுகளுக்கு தே.எ.பேரவை உதவி

(தென்மராட்சி)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவு காரணமாக தாய் அல்லது தகப்பனை இழந்த நிலை யில் இருக்கும் 50 சிறுவர்களுக்கு தென்மராட்சி தேசிய எழுச்சி பேரவை நிதியுதவியை வழங்குவதற்குரிய ஏற் பாடுகளைச் செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப் பட்டுள்ள 50 சிறுவர்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபா வீதம் மொத்த மாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட வுள்ளது எனத் தேசிய எழுச்சிப் பேர வையின் செயலாளர் க.சந்திரசே கரம் தெரிவித்துள்ளார்.

இதற்குரிய நிதியுதவியை சாவ கச்சேரி, கைதடி மற்றும் கொடிகாமம் பிரதேசங்களில் தேசிய எழுச்சிப் பேரவை திரட்டியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(ப-16)

சுனாமியால் கல்வி உடைமைகளை இழந்த

# உயர்தர மாணவர்களுக்கு மாணவர் பேரவையினர் உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களுக் குத் தேவையான பாட விளக்கக் குறிப்புக்களைப் பெற்றுக்கொடுப் பதற்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் நடவடிக்கை எடுத் துள்ளனர்.

வரும் ஏப்ரல் மாதம் பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாணவர் கள் யாராவது சுனாமியால் பாதிக் கப்பட்டுத் தங்கள் கல்வி உடை மைகளை இழந்திருப்பின் அவர் கள் தம்முடன் தொடர்புகொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள லாம் என்றும், உதவிகோருவோர் நேரடியாகவே தம் தலைமையகத் துடன் தொடர்புகொள்ளுமாறும் அறி வித்துள்ள மாணவர் பேரவையி னர்,

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம் கல்வியியற் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களையும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர்.

(ப)

# சுனாமியால் யாழ்.மாவட்டத்தில் 40 ஆயிரத்து 510 பேர் இடம்பெயர்வு

-யாழ். செயலகத்தின்- இறுதி புள்ளிவிபரம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக் கள் 24 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட செயலகத்தின் இறுதிப் புள்ளி விபரம் தெரிவித்துள்ளது.

இவ் 24 நலன்புரி நிலையங்களில் 4ஆயிரத்து 402 குடும்பங்களைச் சேர் ந்த 16 ஆயிரத்து 394 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

பருத்தித்துறையில் உள்ள 13 நலன்புரி நிலையங்களில் 2ஆயி ரத்து 175 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 955 பேரும், மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள 10 நலன்புரி நிலை யங்களில் ஆயிரத்து 968 குடும்பங் களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 329 பேரும், சாவகச்சேரியிலுள்ள ஒரு நலன்புரி நிலையத்தில் 45 குடும்பங் களைச் சேர்ந்த 218 பேரும் வாழ்ந்து வருவதாகப் புள்ளிவிபரம் காட்டுகிறது.

மேலும் 6ஆயிரத்து 296 குடும் பங்களைச் சேர்ந்த 24ஆயிரத்து 116 பேர் நண்பர்கள் மற்றும் உறவினர்க ளின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதி க்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் மொத் தம் 10ஆயிரத்து 698 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 510பேர் நலன் புரி நிலையங்களிலும், நண்பர்கள், உற வினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# அலுவலகம் அமைப்பு

(மருதங்கேணி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நீர்ப்பாசனத் திட்டத்தின் உதவியுடன் 45 இலட் சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் 80 வீத கட்டுமானப் பணி முடிவடைந்துள்ளதாகவும் அடுத்த மாதம அளவில் திறக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. (ப-35)

# ஷெல்கள் மீட்பு

(மருதங்கேணி)

கொடிகாமம் அல்லாரை சீலன் பூங்கா பகுதியில் தனியாருக்குச் சொந் தமான காணி ஒன்றை உழுதபோது நிலத்தினுள் புதைந்து கிடந்த ஷெல் கள் மீட்கப்பட்டுள்ளன.

ஷெல்கள் தென்பட்டதும் காணிச சொந்தக்காரர் மிதிவெடி அகற்றும் பிரிவினருக்கு அறிவித்ததைத் தொடர் ந்து அவ்வெடிபொருள் மீட்கப்பட்ட தாகத் தெரியவருகிறது. (ப-35)

# பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

சாவக்சேரி கைத்தொழில் வணி கர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமை யில் நடைபெறவுள்ள இப்பொதுக் கூட்டத்தில் 15 பாடசாலை மாணவர் களுக்கு அமரர் நமசிவாயம் நினைவு புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட வுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிர தேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிர தமவிருந்தினராகவும், தமிழீழ விடு தலைப்புலிகளின் தென்மராட்சிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் சிசுஸ் வரன் சிறப்பு விருந்தினராகவும் பங்கு கொள்கின்றனர். (ப-16)

# மீள இயங்கும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள உப தபாலகங்கள் இன்றுமுதல் மீள இயங்கவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து பளை தபாலகத்தில் தற்காலிகமாக இயற்கிவந்த இது மீளவும் தன் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது. (ப-35)

# மீராகேணியில் துப்பாக்கிச்சூடு

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட் பட்ட மீராகேணி பிரதேச வீடு ஒன் றின் மீது நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளபபட்டுள்ளது.

இதனால் வீட்டின் வெளிப் புறமாகப் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் மற்றும் வீட்டின் சுவரி லும் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதா கத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் இவ்வீடு அமைந் துள்ள பகுதிக்குச் சென்ற இனம் தெரியாத ஆயுததாரிகள் குறித்த வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோ கம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள் ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத் திற்குச் சென்ற ஏறாவூர் பொலி ஸார் ரி-56ரகத் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தும் ஆறு வெற்றுத் தோட் டாக்களை மீட்டெடுத்துள்ளனர். ஏறாவூர் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ற)

# திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக் குளம் பகுதியில் உள்ள வீடொன் றில் பசுமாடு திருட்டுப்போயுள்ளது.

இதேவேளை அப்பகுதியில் சில இளைஞர் குழுக்கள் சட்டவிரோத மான முறையில் பசுமாடுகளை கடத்தி இரவில் வெட்டுவதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (ப-51)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## மரபணு மாற்றப்பட்ட விலங்குகள்

பரமநாதன் சேயோன்,
உதவி விரிவுரையாளர்
விலங்கியற்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

ஓரங்கியின் பரம்பரை அலகை வேறொரு அங்கியின் பிறப்புரிமைப் பதார்த்தத்தில் இணைப்பதன் மூலம் குறித்த அங்கியில் புதிய இயல்புகள் தோற்றுவிக்கப்படும். இவ்வாறு மரபணுக்களை மாற்றும் உயிர்த்தொழில்நுட்பம், பிறப்புரிமைப் பொறியியல் எனப்படுகின்றது. இத்தொழில்நுட்பத்தின் மூலம் உட்புகுத்தப்படும் பரம்பரை அலகு அவ்வங்கியில் வெற்றிகரமாகத் தொழிற்படுவதனால் பல நன்மைகள் பெறப்படலாம்.

1. குறைந்த செலவில் பெருமளவு மருத்துவ மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல்.


2.பழுதடையும் மனித உடலங்களுக்கு மாற்றீடாகப் பொருத்தக்கூடிய விலங்கு அங்கங்களை உருவாக்கல்.

3.தொற்றுநோய்கள் பரவுதலைத் தடுத்தல்/குறைத்தல்.

4. பிறப்புரிமைக் குறைபாடுகள், மற்றும் சில கடுமையான நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை முறைகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான விலங்கு மாதிரிகளைத் தயாரித்தல்.

புதிய பரம்பரை அலகை அங்கியொன்றினுள் செலுத்துவதற்கு பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன.

1.கருக்கட்டல் நடைபெறவுள்ள நேரத்தில் உயர்வலுவுள்ள நுணுக்குக்காட்டியின் கீழ் வைத்து வழங்கியின் **DNA** ஆனது நுண்ணிய புகுத்தி மூலம் முட்டைக் கலத்தினுள் செலுத்தப்படும் **(microinjection)**




(படம் 1)
**புதிய பரம்பரை அலகு ஒன்றை ஊசி மூலம் கருக்கட்டலுக்குத் தயாரான முட்டைகளை கலத்தினுள் புகுத்துதல்**

2.முளைய விருத்தியின் மிக ஆரம்பக் கட்டத்தில் முளையத்திலிருந்து சில கலங்களைப் பரிசோதனைக்குழாயில் எடுப்பதன்மூலம் **DNA**ஐ அக்கலங்களினுள் செலுத்துதல்.

3.வைரசுகளின் பிறப்புரிமைப் பதார்த்தத்தில் தேவையான பரம்பரை அலகுகளை இடைப்புகுத்திய பின் குறித்த வைரசை அங்கிகளில் தொற்றலடைய விடுவதனால் புதிய பரம்பரை அலகு குறித்த அங்கியின் பிறப்புரிமைப் பதார்த்தத்துடன் இணையும்.

4.சரியான குறுகிய மின் அதிர்ச்சி அளிக்கப்படும்போது கலங்கள் நேரடியாக **DNA** நுண் துண்டுகளை உள்ளெடுக்கும்.

5.பொஸ்போலிப்பிட் மென்சவ்வால் சூழப்பட்ட **DNA** கொண்ட புடகங்கள் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றன. இவை **Liposome** எனப்படும். இவை கலமென்சவ்வுடன் இணைவதனால் துண்டுகள் கலங்களினுள் உள்ளெடுக்கப்படும்.

பிறப்புரிமைப் பொறியியலை பிரயோகிக்கப்படும் அங்கி, பிரயோகிக்கப்படும் நோக்கம், பரம்பரை அலகைப் பெறும் அங்கி, பரம்பரை அலகு பெறப்படும் அங்கி, பரம்பரை அலகின் வகை என்பவற்றுக்கு ஏற்ப இம்முறைகளுள் ஏதாவது ஒன்று தெரிவு செய்யப்படும்.

### மரபணு மாற்றப்பட்ட பண்ணை விலங்குகள்

பிறப்புரிமைப் பொறியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஆடு, மாடு, போன்ற பண்ணை விலங்குகளில் மரபணுமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இவற்றின் பாலில் இருந்து பெருமளவு மருத்துவப் புரதங்களைப் பெறமுடியும்.

முதலில் 1990களில் பன்றிகளில் மரபணுமாற்றம் செய்யப்பட்டது. பிறப்புரிமை மாற்றப் பரிசோதனைகளுக்கு பன்றிகள் மிகப் பொருத்தமானவை. ஏனெனில் அவை,

1குறைந்த கர்ப்பகாலம் கொண்டவை (4மாதங்கள்).

2.குறுகிய காலத்தில் இனம்பெருக வல்லவை (12 மாதங்கள்).

3.ஒரு தடவையில் அதிக குட்டிகளை ஈனும் (10–12 குட்டிகள்).

4.அதிகளவு பாலை உற்பத்தி செய்கின்றன.



**மரபணுமாற்றம் செய்யப்பட்ட பன்றி** படம் 2

(தொடரும்)

# எண்களால்

## 6. சுக்கிரன் பொதுப்பலன்

சுக்கிரனைப் பற்றி அறியாதவர்கள் உலகில் யாரும் இல்லை எனலாம். இது நம்நாட்டு வழக்கில் வெள்ளி எனக் கூறுவர். சிலருடைய முன்னேற்றத்தையும், அவர்களுடைய சுகபோக வாழ்க்கையையும் பார்த்து மற்றவர்கள் விமர்சிக்கும் போது “அவனுக்கென்ன சுக்கிரதிசை அடிக்கிறது” எனக் கூறுவர். சுக்கிரன் என்றாலே ஆடம்பரம், பகட்டு என்பது எல்லோர் மனதிலும் உள்ளது. இப்படிப்பட்ட சுக்கிரன் கிரகங்களில் ‘அசுரகுரு’ என அழைக்கப்படுகிறது.

இந்த உலகத்தில் உள்ள எல்லாவித சுகபோக பாக்கியங்களையும் அனுபவிக்கத் தூண்டும் தன்மையுடையது சுக்கிரன். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் பெண்கள் ஆண்களாலும், ஆண்கள் பெண்களாலும் கெடும் நிலை உண்டாகிவிடும். பொதுவாகவே இந்த ஆதிக்கக்காரர்களின் நடவடிக்கைகள் கவர்ச்சியானதாக இருக்கும். பார்க்கும்போதே புன்முறுவலுடன் காட்சியளிப்பர். எப்போதும் சுகங்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பர். பணக்காரர்களாக வாழும் இவர்கள் துன்பங்களை அதிகம் நினைக்காது இன்பகரமான நிகழ்ச்சிகளைப் பற்றியே சிந்தனை செய்துகொண்டிருப்பர். நாம் இறக்கப்போகும் மனிதன்தானே, உலகத்தில் உள்ளதை நன்கு அனுபவித்து இறப்போம் எனக் கொள்கை கொண்டவர்கள். இவர்களில் 9 வகை உண்டு.

## உடல் எண் 6 உயிர் எண் 1

6,15,24 போன்ற திகதியில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் சுக்கிரன், சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். இவர்கள் பேசுகின்ற போது மற்றவர்கள் கேட்கும் அளவிற்குக் கவர்ச்சியாக இருக்கும். இந்த உலகத்தில் பிறந்த நாம் எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்கவேண்டும் என்று எண்ணுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வசதியுள்ளவராக இருக்கின்றனர்.

மிடுக்கான தோற்றம் கொண்ட இவர்கள் தான் பேசுகின்றபோது சுத்தமாகவும், அழகாகவும் பேசுவர். இவர்களது பெயர் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையுமேயானால் உலகில் பெறவேண்டிய பாக்கியங்களையெல்லாம் பெற்று வீடு, வாகனம், நிலம் போன்ற எல்லா வசதிகளுடனும் வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமற்ற நிலையில் இருக்குமேயானால் இவர்களுக்கு எல்லாவிதமான வாய்ப்புக்கள் இருந்தும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

வாகனப் பிரியரான இவர்கள் தான் பயன்படுத்தும் வாகனங்களை அழகுபடுத்தி வைத்துக்கொள்வர். இயற்கைக்காட்சிகளையும், மலைப் பிரதேசங்களையும், நீர்வீழ்ச்சிகளையும் சுண்டுகளிக்க ஆசைப்படுவர். சிலர் தூர தேசப்பயணங்கள் செய்வதில் ஆர்வம் உள்ளவராக இருப்பர்.

எப்போதும் தூய்மையாகக் காட்சியளிக்கும் இவர்கள் எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் அலட்டிக்கொள்ளாது செயற்படுவர். இவர்கள் பேசுகின்ற மொழி சுத்தமாகவும், சுருக்கமாகவும் இருக்கும். அதிகம் சிரமப்படாமல் பணம் ஈட்டும் பாக்கியம் உள்ளவர்கள். உத்தியோகம் பார்க்கும் இவர்கள் கூட்டு சம்பந்தமான தொழில் செய்யவும் முற்படுவர். ஆடம்பரப்பிரியரான இவர்களுக்குப் பகட்டு சம்பந்தமான தொழில் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். எந்த ஆடையை அணிந்தாலும் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும் இவர்கள் பெண்களாக இருந்தால் ஆண்களிடம் பழகும்போது கவனமாகவும், ஆண்களாக இருந்தால் பெண்களிடம் நிதானமாகவும் இருக்கவேண்டும்.

இவர்களுக்கு எதிர்ப்பு எண்ணான 3 எண்ணிக்கையில் பெயர் அமையுமேயானால் எல்லாவிதமான பலன்களும் தலைகீழாக மாறிவிடும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையாவிட்டால் வெளிநாட்டுப் பயணங்களும் தலைகீழாக மாறிவிடும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் வெளிநாட்டுப் பயணங்களும், உல்லாசப் பயணங்களும் செய்யும் வாய்ப்பும் உண்டாகும்.

எல்லோரிடமும் பழக்கம் வைத்துக்கொள்ளாத இவர்கள் குறிப்பிட்ட நல்ல நண்பர்களை வைத்திருப்பார்கள். தனக்கு லாபமில்லாத காரியங்களில் இறங்கி வீண்பொழுது போக்கமாட்டார்கள். எக்காரியத்தில் இறங்கினாலும் அதில் அவர்களுக்கு வருமானம் வரக்கூடியதாகவே இருக்கும். சிலநேரங்களில் மிடுக்காகப் பேசிக் கடுமையானவராக நடந்துகொள்வர். ஆனால் இவர்கள் கடுமையானவரல்லர். சிலநேரங்களில் தன்னைப்பற்றி தனிமையில் சிந்திப்பர்.

## ஏற்றமிகு வாழ்வு

வயது கூடினாலும் கவர்ச்சி குறையாது. மகிழ்ச்சியாகவும், உல்லாசமாகவும் வாழ ஆசைப்படுவார்கள். கண்ணாடியை அணியும்போது கூட அழகான பிரேம்தான் அணிவர். வீட்டை அலங்கரிப்பதிலும், தூய்மையாக வைத்துக்கொள்வதிலும் ஆர்வம் கொண்டவர்கள்.

கடவுள் நம்பிக்கைக் கொண்ட இவர்கள் முயன்றால் முடியாதது இல்லை என்று கூறுவர்.

Dr.ஆர். துரைமுருகர்

**தொழில்:**– ஆடம்பரப் பொருள் சம்பந்தமான தொழில், காண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ், இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில், வாகனத்தால் ஆன தொழில் இவர்களுக்கு நன்மை அளிப்பவையே.

**நோய் :**– பொதுவாக இந்த எண்ணிக்காரர்களுக்கு உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்கள், நீர் சம்பந்தப்பட்ட நோய்கள், வாயுக்கோளாறு, இரத்த அழுத்தம் போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை:**– இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிர, சூரியன் ஆதிக்கமான 15,24,33,42,60,69,19,37,46,64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொண்டு சிறப்பாக வாழலாம்.

**பின்பற்ற வேண்டியவை:-**

| | |
|---|---|
| யோகமான எண் | –6,1 |
| யோகமான திகதிகள் | –1,10,19,28,6,15,24,9,18,27 |
| யோகமான மோதிரக்கல் | –மரகதம் |
| யோகமான நிறம் | –மஞ்சள், பச்சை |
| ஆகாத நிறம் | –ஒரெஞ்சு, ரோஸ், கத்தரிப்பூ கலர், கறுப்பு |
| ஆகாத திகதிகள் | – 3,12,21,30 |

(தொடரும்)

# இலங்கைப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம்

1 புவியியல் ரீதியாக இலங்கையின் அமைவிடம் பலம் மிக்கதாகும். உதாரணமாக மத்திய கோடடிற்கண்மையிலும், இந்துசமுததிரத்தின் மத்தியிலும் இலங்கையின் அமைவிடம உள்ளது. எரிமலைத்தாக்கம் அதிகமாகவுள்ள பிரதேசங்களை இணைத்து ஒரு கோடு வரையும்போது அதற்கு மிகத் தொலைவிலே இலங்கையமைந்துள்ளது. இத்தகைய சிறப்புமிக்க இன்பத் திருநாடு 1958, 1978 போன்ற காலப் பகுதியில் குறிப்பிட்டுச்சொல்லும் படியான இயற்கையனர்த்தங்களினைச் சந்தித்தது. ஆனால் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மனித உயிர்களையும், பல பில்லியன கணக்கினாலான சொத்துக்களையும் இயற்கையன்னை பறித்துக்கொண்டது இதுதான் முதற தடவை.

இலங்கை நேரப்படி ஆறு முப்பது மணியளவில் இந்தோனேசியாவின் சுமத்திராத்தவுப பகுதியில் (**30km** தொலைவில்) 09.00 றிச்டர் அளவிலான புவி நடுக்கம் ஏற்பட்டு 'சுனாமி' எனப்படும் ஆழியலையைத் தோற்றுவித்து. (உலகிலேயே அதிகப்படியான புவி நடுக்கம் 9.3 றிச்டர் அளவிலே பதியபபடடுளளது). இவ்வலை இந்துசமுத்திரத்தில் பயணம் செய்து ஆபிரிக்காவின் சோமாலியா, கென்யா போன்ற நாடுகள்வரை தனது அசுரததனத்தைக் காட்டியது. சுனாமியலையானது மணிக்கு எழுநூறு கிலோ மீற்றர் வேகத்தில் (**700 km/h**) செல்லக்கூடியது.

ஆனால இலங்கை வந்த சுனாமி வேகம் **500km/h** அதாவது ரொக்கற் விமானம ஒன்றின் வேகத்தினைப்பெறும். இந்த வேகத்தில்தான் ஒருலட்சத்து ஐம்பதாயிரததிற்கு மேற்பட்ட மனித உயிர்களை தென்கிழக்காசிய நாடுகளில பலிகொண்டது. இதில் இநதோனேசியாவில் மாத்திரம் ஒரு லட்சத்து நானகாயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையை எடுத்துக்கொண்டால் மன்னார், புத்தளம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்கள யாவும் முற்றாகப பாதிக்கப்பட்டுள்ளது. மன்னார், புததளம ஆகிய இடங்களில் கூட உயிர் இழப்பு நிகழாமல் இல்லை.

இத்தகைய இயற்கையனர்த்தத்தினால் எமது உறவுகளை, உடைமைகளைப் பறிகொடுத்து நிற்கதியாயிருக்கும் இலங்கையருக்கு இன்னொரு சவர்லாக இலங்கையின் பொருளாதாரம் காணப்படுகின்றது.

இதையுணர்ந்தே அரசாங்கமும், அரசசார்பற்ற தனியார் சாவதேச அமைப்புக்களும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் சமூக அமைப்புக்களும் குறுங்காலம், இடைக்காலம், நீண்ட காலம் என உதவித் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

மீண்டும் ஒருமுறை சுனாமியலை இலங்கையைத் தாக்குமா...? என்பது நம்மில் பலரிடம் நிலவும் கருத்து. நம்மைத்தான் சுனாமியலை தாக்கவில்லையே, ஆதலால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி மட்டும் செயதால் போதும் எனக் கருதுவோர் பலர்! அதேகணம் சுனாமியின பொருளாதாரத் தாககமானது ஒட்டு மொத்தச் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவர் மீதும் செலுத்தப் படுமென்பது மறைமுகமாகவுளள உண்மையாகும்.

எனவே இலங்கைப் பிரஜையாக இருக்கும் ஒவ்வொருவனும் தனது வீட்டுப் பிரச்சினையாகவே கருதிக்கொள்ளவேண்டும.

இந்தக் கருத்தினை உதாசனம செய்வோர் சொல்கினற சாக்குப்போக்கு அமெரிக்க டொலருக்கெதிராகவும், யூரோ நாணயத்திறகெதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்து செலகிறது. வெளிநாடுகளின் உதவிகள் தாராளமாகக் கிடைக்கின்றது. அரசாங்கம் புதிய புதிய திட்டங்களை உருவாக்கி கண்ணின் இமைபோல சேவையாற்றுகிறது என்பனவாகும். அவர்கள் கூறுவது தொண்ணூற்றொன்பது விதமும் உண்மைதான். ஆனால இவற்றின் நன்மைகள் எத்தகையோரிடம் விரைவாகச் சென்றடையப்போகின்றன? அரசாங்கத்தின வரவு - செலவுத் திடடத்தினை மத்தியவங்கியும், நிதியமைசசும சேர்ந்து தயாரித்துவிடலாம்.

இலஙகையின் சனததொகையில் நாற்பது வததினர் வறியவர்கள அதாவது சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்தையேனும் அடைந்து கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இவ்வாறான வறியமக்களின் வரவு செலவுத்திட்டத்தினை யாரும் எளிதில் தயாரித்துவிட முடியாது. காரணம் அவர்களைப பொறுத்தவரை வரவு என்பது துன்பங்கள், செலவென்பது வாழ்நாட்கள். ஆனால் இவர்களே நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலுமபு. அநத முதுகெலும்பு வளைந்து முறிந்தபின் நாம் எதனைத் தூக்கி நிறுத்துவது? இனவாதத்தையா?, ஊழலமோசடிகளையா? அல்லது செல்வச் சீமானகளின செந்தாமரைக கைகளையா...? என்வேதான் நாட்டைக காட்டியெழுப்பும் பணி எங்களின் கைகளில் உள்ளதெனலாம். நாம் இதற்காக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை நோக்கு முனனர் எந்தளவுதூரம பொருளாதாரம் தாக்கப்பட்டுள்ளது என நோக்குவது அவசியம்.

*1. இலங்கையின் கரையோர மக்கள் வேலையிழந்துள்ளமை:* இதன் பொருளாதார விளைவாக பொருளாதாரம் குறிப்பிட்டளவு உறபத்தியையிழக்கும். வேலையின்மையினால் வருமானம் அற்றுப்போகும். இது வறுமையை தோற்றுவிககும. காரணம் கரையோரத்தின் பெரும்பகுதி மக்கள் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடித் தொழிலிலேயே சிறப்புத்தேர்ச்சி பெறறுள்ளனர். இதனால உடனடியாக வேறு தொழிலுக்கு மாறமுடியாதுள்ளது.

*2. மீன் வளங்களும், மீனபிடி உபகரணங்களும் அழிந்து போயுளளமை:* மீன் இனங்கள் இந்து சமுத்திரத்தைவிட்டு இடம்பெயரநதும், அழிந்தும்போயுள்ளது. இதனால் நீண்டகாலத்தின் பின்னரே மீன்பிடித்தொழிலில் திருப்தி காணமுடியும். புதிய மீன் இனங்களையும், மீன்பிடி உபகரணங்களையும் இறககுமதி செய்ய வேண்டியுள்ளதால் இறக்குமதிச செலவுகள் அதிகரிக்கும். அத்துடன் இவை ஏழைமக்களைச் சென்றடைய நீண்டகாலம் பிடிக்கும். அதுவரை ஏழை மீனவர் கதி என்ன என்பது கேள்விக் குறியே.

*3. மீனவக் குடும்பங்களிற்கான மீளகுடியேற்றச் செலவுகள் காணப்படுதல்:* இதுவோ பிரதான பிரச்சினை. பொருளியல்ரீதியாக நோககின் அரசின் நடைமுறை மாற்றல் செலவாக அமைவதால் அரச வரவு செலவுத் திடடதின் நடைமுறைச் செலவுகள் அதிகரிக்கும். இதைவிட வர்த்தக மானியறிவித்தலின்படி கடற்கரையிலிருந்து முன்னூறு மீற்றர் உள்நோக்கியே புதிய கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும். இதன் நோக்கம் எதிர்காலத்தில் சுனாமியின் தாக்கத்தை இயன்றவரை தவிர்ப்பதே. எனினும் இவ்வறிவித்தலை பின்பற்றும் போது சில பிரதேசங்களில் நகரத்தையும் தாண்டி குடியேற்றங்களை அமைககவேண்டிய தேவையுள்ளது. இதனால் மீனவர்கள் தொழில் ரீதியான மனஉளைச்சல்களுக்கு ஆளாகலாம். இத்திட்டத்தின் விளைவுகளை மட்டக்களப்பு எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது...?

*4. உள்நாட்டு மீன்பிடி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் வெளிநாட்டு மீன் பொருட்களிற்கான கேள்வியதிகரிக்கலாம்:* இதனால் இறக்குமதிச் செலவுகள் அதிகரிக்கும். உதாரணமாக ரின்மீன, மாசி, கருவாடு போனறவற்றை மக்கள் அதிகமாக வாங்குவர். இதனைக் கட்டுப்படுத்த அரசு இறக்குமதித் தீர்வை விதிப்பின் இறைச்சியென்ற பெயரில் உள்நாடடு விலங்குகளின கொலைகள் இடம்பெறலாம்...?

**என்.சிவரூபன்**
யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்

*5. உடகடடமைப்பு வசதிகள் பாதிககபபட்டுள்ளமை:* இலங்கையின் கரையோரப்பகுதிகளிள் வீதிப் போக்குவரத்து, துறைமுகம், தொடர்பாடல்வசதி, மின்சார வ்சதி, நீர்வடிகால் வழங்கல் போன்றவற்றைப் புனரமைக்கவென பெருமளவு நிதி தேவைப் படுகின்றது. பொருளாதாரத்தின இரு கண்களில் ஒன்றெனக் கருதப்படும் உட்கட்டமைப்பு வசதிகள்தான் எதிர்காலத்தில் ஒரு ஸ்திரமான முதலீடு, உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி போன்றனவற்றையேறபடுத்த உதவுவதும இதுவே. இந்திய உபகண்டத்தில் பெயர் போன முதலீட்டுச் சபையான இலங்கை முதலீட்டுச் சபையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது யார்...?

(தொடரும்...)

# பக்கபலமான எமது உறவுகளை 'சுனாமி' பலியெடுத்து விட்டது


## சுவிஸில் முல்லை மாவட்ட கடற்புலிகளின் தளபதி உரை

போராட்ட காலத்தில் எங்களுக்காக சுடுகடல் மணலில் உணவுடன் காத்திருந்த மக்களை இழந்து தவித்து நிற்கின்றோம்.

சுவிஸில் நடைபெற்ற கேணல் கிடடு உள்ளிட்ட 10 வேங்கைகளின் நினைவு நிகழ்வில் கடற்புலிகளின் முல்லை மாவட்டத் தளபதி த.விநாயகம் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடலிலே போரை நிகழ்த்தி விட்டுக் கரைதிரும்பும்போது சுடும் மணலிற்கு மத்தியிலும் சாப்பாட்டுடனும் இளநீர் குலைகளுடனும் காத்திருந்த மக்கள் இன்று ஆழிப்பேரலையின் கோரததால் பலியாகியும், அனைததையும் இழந்து நிற்கின்றனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் எமது தாயக மக்களுககு உடனடியாக ஆற்றிய பணிக்கு நன்றிகளை நாங்கள் தெரிவிக்கின்றோம். குறிப்பாக இளையோர் ஆற்றிய பணிக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். தொடர்ந்தும் இளையோர் தமது பணிகளை ஆற்ற வேண்டும்.



நாம் போரை ஆரம்பிக்க மாட்டோம். ஆனால் போர் எம் மீது திணிக்கப்பட்டால் அப் போரை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# சுனாமியின் பின் புவியியலில் மாற்றம்?

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்தின் பின் ஏற்பட்டிருக்கக்கூடிய புவியியல் மாற்றங்கள் பற்றி பிரிடடனின் வரைபட இயக்கக் குழுவினர், இலங்கையின் தேசிய செய்முறைகளுக்கான நிலையம் என்பனவற்றின ஒத்துழைப்புடன் நில ஆய்வுத் திணைக்களம் தொடர்நது ஆராய்வுகளை மேற்கெண்டு வருகிறது.

இந்த ஆராய்வுகள் பற்றி ஆராய்வுத் திணைக்களத்தினருக்கு வழங்கப்பட்ட பயிற்சியினைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்வில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களின் எல்லைகளை நிர்ணயித்து அதன்மூலம் புவியியல மாற்றங்கள் அறிந்துகொள்ளப்படவுள்ளன.

கடந்த மாதம் 28ஆம் திகதி, பிரிட்டனில் இருந்து டேவிட் ஸ்பீக்மான் தலைமையில் பத்துப்பேர் அடங்கிய குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. அந்த விஜயத்தின் போது எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் பாதிக்கப்ட்ட இடஙகளின் வரைபடங்கள் கணனியில் பதிவுசெய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

விண்கலத்தின் உதவியுடன் பாதிக்கப்பட்ட கரையோர இடங்களைப் படங்கள் எடுப்பதன் மூலம் நில ஆராயவுத திணைக்களம் கணனியில் தொடர்ச்சியாக மாற்றங்களைப் பதிவு செய்து வரும். இதன் மூலம் எதிர்வரும் காலங்களில், புதிய கட்டட நிர்மாணங்களுக்கான இடங்களைத் தெரிவு செயவதில் முக்கிய பல முடிவுகளை எடுக்கமுடியும். (ற)

# மீட்கப்பட்ட ஏழு சிறுவர்களும் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் கருவேப்பங்கேணி பிரதேச வீடொன்றில் சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்பட்டு பொலிஸாரினால் மீட்கப்பட்ட எழு சிறுவர்களும், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர்களின் சட்டபூாவமான பாதுகாவலாகள கண்டுபிடிக்கப்படும்வரை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில் இவாகளைத் தங்கவைக்குமாறு நீதிபதி எம்.எச்.எம.அஜ்மீர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, சிறுவர்களை சட்டவிரோதமாகத் தடுத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தாம் ஒரு மத போதனையாளர் எனவும் சிறுவர்களைப் பெற்றோரிடமிருந்தே பொறுப்பேற்றதாகவும், அதற்கான எழுத்துமூல ஆவணங்களை சமர்ப்பிப்பதாகவும் கூறியதையடுத்தே அவர் விடுதலை செய்யப்பட்டதாக மட்டக்களபபு தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹரிஸ் சந்திரபண்டார தெரிவித்தார். (ற)

# சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை அரசு மீண்டும் தவறவிட்டுவிட்டது

## வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் செவ்வி

இலங்கை அரசு சமாதானத்துக்கான சந்தர்ப்பத்தை மீண்டும் தவறவிட்டுவிட்டது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் கிளிநொச்சியில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது விடயம் குறித் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்பத்தில் நாம் தென்னிலங்கையிலிருந்து உடனுக்குடன் சாதகமான சமிக்ஞைகளைக் கிடைக்கப்பெற்றோம். ஆனால் அண்மையில் இலங்கை வந்த ஐ.நா. செயலாளர் நாயகத்தை வன்னிககு வரவிடாமல் ஜனாதிபதி தடுத்தமை போன்ற செயல்களால் இருதரப்புக்கும் இடையிலிருந்த நம்பிக்கை, நல்லிணக்கம் போன்றவற்றை அரசு போட்டுடைத்து விட்டது.

ஐ.நா. செயலரை வன்னிக்கு அனுமதிக்காத அரசின் செயற்பாடு தமிழ் மக்களின மணங்களில்



என்றும் ஆறாத வடுவை ஏற்படுத்திவிட்டது என்று கூறியுள்ளார். (ற-4)

# புலம்பெயர்ந்து வாழும் உறவுகளே! பாதிக்கப்பட்டோருக்கு உதவுங்கள்

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உருக்கமான வேண்டுகோள்

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்குப் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் யாவரும் தம்மாலான உதவிகளை வழங்க வேண்டும் என உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

சமீபத்தில் தென்னாசியாவில் சுமாத்திராவுக்கு அருகே தோன்றிய பயங்கரமான கடல் பூகம்பத்தினால் ஏற்பட்ட சுனாமி என்ற பூதாகரமான கடல் கொந்தளிப்புகளால் வெள்ளப்பிரளயம் உண்டாகி சுமாத்திரா, மலேசியா, தாய்லாந்து, அந்தமான், நிக்கோபார் தீவுகள், இந்திய தென்தமிழ்நாடு, இலங்கையின் வடக்கு-கிழக்கு, தெற்குப் பகுதிகள் மாலைதீவுகள் போன்ற இடங்களின் கரையோரப் பகுதிகள் பெருந்தாக்குதல்களுக்குள்ளானதால் இலட்சக்கணக்கில் மக்கள் பலியாகிவிட்டனர்.

இந்த இயற்கைப் பேரழிவினால் ஆயிரக்கணக்கானோர் காணாமலே போய்விட்டனர். இந்தத் துயரம் மிகுந்த இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுத்திய பேரழிவுகள் மிகுந்த மனவேதனைகள், துயரங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

நமது நாட்டில் தமது உறவுகள் வாழும் வடக்குக்-கிழக்குப் பகுதிகளின் வடமராட்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை கரையோரக் கிராமங்கள், நகரங்கள் இந்தக் கடல் கொந்தளிப்பால் அழிந்து சிதைக்கப்பட்டுவிட்டன.

இதில் 20ஆயிரம் மக்கள் வரை இறந்துவிட்டனர். பல ஆயிரம்பேர் காணாமல் போயுள்ளனர். கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் வாழ்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும், தென்னிலங்கையில் அம்பாந்தோட்டை, காலிப் பகுதிகளில் வாழ்ந்து வந்த சிங்களவர், முஸ்லிம் மக்களும் 25ஆயிரத்துக்கு மேல் காவுகொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதேபோல், தென்தமிழ் நாட்டில் நாகை மாவட்டம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை மாவட்டங்கள் மூன்றிலும் மற்றும் புதுச்சேரி மாநிலப் பகுதிகளிலும் நடந்துள்ள பேரழிவில் பல ஆயிரம் பொதுமக்கள் மறைந்தும் காணாமலும் போய்விட்டனர். மேலும் மலேசியா, தாய்லாந்து நாடுகளில் ஆயிரக்கணக்கானோரும் சுமாத்திராவில் 2இலட்சம் பேரும் சுனாமி கொந்தளிப்பில் அழிந்து போய்விட்டார்கள்.

இங்கே 20 ஆண்டுகளாக நடந்த போரில் சிக்கி பல அழிவு நாசங்கள் இன்னல்களைச் சந்தித்த நமது வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கு இந்த இயற்கை அனர்த்தங்களும் பேரிடியாக அமைந்துவிட்டன.

இதனால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ள நமது 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு உடனடியான அத்தியாவசிய தேவைகள் ஏற்பட்டுள்ளதால் இவர்கள் பாரிய வாழ்வியல் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களுக்கு உடனடியாக உலர் உணவு, உடைகள், போர்வைகள், மருந்துப் பொருட்கள் குடிநீர், மற்றும் குடியிருப்பு வசதிகள் செய்யப்படவேண்டியுள்ளன. ஆகையால், உள்ளூரில் வசதிபடைத்தோர், சாதாரண மக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் யாவரும் தம்மாலான எல்லா உதவியாதரவுகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

இந்தப் பணிகளில் இருந்து செயல்பட்டுவரும் செயலணிகள் மற்றும் சமூகசேவை நிறுவனங்கள் மூலம் உதவி ஆதரவுகளை நிதியாகவும் பொருட்களாகவும் வழங்கி உதவும்வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நிலையில், பாதிப்புக்குள்ளாகி வாழும் எல்லா இடத்து மக்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை நமது அமைப்பின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம் எனவும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது. (க)

### விஜயம்

கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜொங் ஆட்டே தலைமையிலான கொரியநாட்டுக் குழு ஒன்று கடந்த 16ஆம் திகதி யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

மனிதநேய விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.வந்த இக்குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டுள்ளனர். (ப-101)

### கால்கோள் விழா

யாழ்.கல்வி வலயத்திலுள்ள தரம் ஒன்று வகுப்புகள் உள்ள சகல பாடசாலைகளிலும் எதிர்வரும் 27ஆம் திகதி தரம் ஒன்றில் சேரும் மாணவர்களுக்கான கால்கோள் விழா நடைபெறவுள்ளது.

இதற்கமைய, தரம் 2இல் கல்வி கற்கும் மாணவர்கள் தரம் ஒன்றில் புதிதாகச் சேரவுள்ள மாணவர்களுக்கு அன்றையதினம் மாலை அணிவித்து இன்முகத்துடன் வரவேற்று தாம் கல்விகற்கும் பாடசாலையைச் சுற்றிக் காண்பிப்பதுடன் விதவிதமான தின்பண்டங்களும் பரிமாறப்படும். தொடர்ந்து அன்றைய தினமே புதிய மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியைத் தொடங்குவர். (ற-5)

### சிறுவிளம்பரம்

#### தேவை

லொறி ட்றைவர், கிளினர், விறகு கொத்துபவர், ரிங்கர் வேலை ஓட்டுநர் தேவை. தொடர்பு:- சிவலிங்கம் மோட்டேர்ஸ், 77 மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (9229)

### உபகரணங்கள் வழங்கல்

(மருதங்கேணி)

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர் நலன்புரிச் சங்கம் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் தங்கியுள்ள சுனாமி பேரலை அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த 180 குடும்பங்களுக்கு வீட்டுப் பாத்திரங்களை வழங்கியுள்ளது. (ப-35)

### கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 10.00 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியமர்வுச் செயற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ள இச்சந்திப்பில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் உட்பட உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-43)

# தமிழரின் போராட்ட இலட்சியங்களை உலக அரங்கில் பறைசாற்றியவர் கிட்டு

## யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

(மருதங்கேணி)

தமிழ்த் தேசிய இலட்சியத்தை சர்வதேசத்திற்கு புலம்பெயர்ந்த மக்கள் மூலம் எடுத்தியம்பியவர் தளபதி கேணல் கிட்டு. இன்று அவருடைய பணி விருட்சமாக வளர்ந்து நிழல் பரப்பி வருகிறது.

இவ்வாறு வல்வெட்டித்துறை தீருவில் மைதான சதுக்கத்தில் இடம்பெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வீரவேங்கைகளின் 12வது நினைவுதினத்தில் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி தெரிவித்தார்.

கயல்விழி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

சூரியனைத் தேடிப்பறந்து கொண்டிருக்கும் பீனிக்ஸ் பறவை துயர்களைச் சந்தித்து மீண்டும் மீண்டும் சிறகடித்து வீழ்ந்தாலும் அது தன் விடாமுயற்சியில் ஈடுபடுகிறது.

அதேபோலவே, எவ்வளவோ துயர்களையும் அழிவுகளையும் காலங்காலமாக சந்தித்துவரும் நாங்கள் துவண்டுவிடாது தமிழீழ தேசியத் தலைவரின் தெளிவான வழிநடத்தலின் கீழ் போராட்டத்தை நகர்த்திக்கொண்டு வருகிறோம். அத்துடன் மீண்டும் எழும் பீனிக்ஸ் பறவை போல நாமும் எழுவோம்.

அள்ளித்தந்த கடலே எமது உறவுகளையும் சொத்துக்களையும் தானே எடுத்துக்கொண்டது. தமிழனை தலைநிமிரச் செய்து சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டிய கடல் எம்மை துன்பத்தினுள் ஆழ்த்தியபோதும் நாம் எமது தளபதியை நினைவு கூர்ந்துகொண்டிருக்கிறோம் என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன் பேசுகையில் கூறியதாவது,

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களில் 30 ஆயிரம் குடும்பங்கள் இன்று அகதிகள் முகாமிலுள்ளனர். கடந்த 20 வருடகாலமாக விடுதலைப் போராட்டத்திற்கு கொடுத்த உயிர், உடமைகள், அழிவுகளைவிட சுனாமி பேரலையால் ஏற்பட்ட அழிவுகள் அதிகம்.

அரசாங்கம் எம்மை நசுக்குவதற்கான திட்டங்களை மேற்கொண்டுவருகிறது. இந்நிலையில் கேணல் கிட்டு சொன்னது போல எமது சொந்தக்காலில் நின்று தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அதற்காகவே சர்வதேச சமூகத்தின் ஆதரவை வேண்டுவோம்.

ஐ.நா.செயலர் கோபி அனானை எமது பிரதேசத்திற்கு வராமல் தடுத்ததன் நோக்கம் என்ன? அதாவது சர்வதேச அங்கீகாரம் புலிகளுக்குக் கிடைத்துவிடும் என்ற வஞ்சக நோக்கிலேயே அவரை வராமல் தடுத்தது. எமது தளபதி கேணல் கிட்டுவின் இலட்சியப் பாதையில் துணிவுடன் தாயகத்திற்காகப் போராடுவோம் என்றார். (ப-35)

## புண்ணிய நாச்சியம்மையார் தின பண்ணிசை இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சைவபரிபாலன சபை புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு நடாத்தும் பண்ணிசைப் போட்டியின் இறுதிநாள் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவுக்கு ஒருவரே தோற்றலாம். சென்ற வருடங்களில் ஒரு பிரிவில் பரிசுபெற்றவர்கள் இவ்வருடம் அப்பிரிவுக்குத் தோற்றமுடியாது. பிரிவுக்குரிய பாடல்கள் யாவும் மனனம் செய்திருக்க வேண்டும். பிரிவுக்குரிய திருமுறைப் பாடல்கள் தொடர்பான வினாக்கள் வாய்மொழிமூலம் கேட்கப்படவுள்ளன.

மேற்படி போட்டி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என்று மூன்று பிரிவாக நடைபெறவுள்ளது. போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றவுள்ளோர் விண்ணப்பங்களை அனுப்பும் இறுதி நாள் எதிர்வரும் 31ஆம் திகதியாகும். (ற-9)

## இந்திய அரசின் உதவி குறித்து சுகாதார அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா அளப்பரிய உதவிகளை செய்துள்ளதன் மூலம் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு என்பதை இந்தியா நிரூபித்துள்ளது என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

இந்திய கரையோரக் காவல் பணிகளில் ஈடுபடும் "சமர்" என்ற கப்பலில் ஏற்றிவரப்பட்ட நிவாரணப் பொருட்களை நேற்று முன்தினம் பெற்றுக்கொண்ட பின்னர் அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவ் 120தொன் நிவாரணப் பொருட்களை சுகாதார அமைச்சரிடம் கையளித்தார்.

இவற்றில் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், சமையல் உபகரணங்கள், சிறுவர்களுக்கான புத்தகப் பைகள் என்பன அடங்கியுள்ளன.

இவைதவிர சுனாமி அலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என இந்திய அரசு ஏற்கனவே 500தொன் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

அத்துடன், இந்தியாவின் 14 கடற்படைக் கப்பல்கள் விமானங்கள் என்பன நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மேலும், மருத்துவ நிபுணர்கள், பொறியியலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் ஆகியோரும் இலங்கைக்கு வந்து பணியாற்றிவருகின்றனர். (க-60)



வடமராட்சி புலோலி புற்றளை மகாவித்தியாலய நலன்புரி முகாமில் உள்ள பாதிக்கப்பட்டோருக்கு யேசுசபை அகதிப்பணியிலிருந்து (J.R.S) வருகை தந்தோர் உதவு பொருட்களை வழங்கினர். அங்குள்ள குழந்தைகளின் பெற்றோருக்கு அத்தியாவசிய பொருட்களை சிஸ்ரர் றிமோசினி வழங்குவதைப் படத்தில் காண்க.

(எஸ்.சுபாஸ் சந்திரபோஸ்)

# ஈராக்கில் தொடரும் குண்டுவெடிப்புகள்

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் கார்க் குண்டு வெடிப்பில் ஏழுபேர் பலியாயினர். மற்றொரு சம்பவத்தில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில ஈராக இராணுவத்தினர் 8பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு இம்மாத இறுதியில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடக்க உள்ளது. இந்தத் தேர்தலை நடத்தவிடாமல் தடுக்கச் சதாம் ஆதரவு கொரில்லாக்கள் பல்வேறு நாசவேலைகளைச் செய்து வருகின்றனர். தேர்தல் நடக்கவுள்ள பள்ளிகள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் மீது கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றர்.

பாக்தாத்தின் வடக்குப் பகுதியில் உள்ள பாய்ஜி பகுதியில பொலிஸ் நிலையத்தின் மீது நேற்றுமுன்தினம் கார் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது.

இந்தச் சம்பவத்தில் ஏழுபேர் பலியாயினர். 15பேர் படுகாயமடைந்தனர். பகுபா நகரத்தின் செக் போஸ்ட்டில், கொரில்லாக்களைத் தடுத்த இராணுவத்தினர் மீது துப்பாக்கிச்சூடு நடந்தது.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினர் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர்.

குண்டுவெடிப்புக்களும், துப்பாக்கிச்சூடும் ஈராக்கில் தொடாகதையாகவுள்ளதால், தேர்தல் அமைதியாக நடக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (து)

WORLD NEWS
உலக தரிசனம்

## மனித உரிமை மாநாடு

வங்கதேசத் தலைநகர் டாக்காவில் 3நாள் மனித உரிமை மாநாடு கடந்த திங்கட்கிழமை தொடங்கியது.

வங்கதேசத்தில் ஜனநாயக அமைப்புக்கள் வலுப்படவேண்டும், நிர்வாகம் சரிப்படவேண்டும், நீதித்துறை சுயேச்சையாகச் செயற்படவேண்டும், அனைத்து மக்களுக்கும் அரசியல் சட்ட உரிமைகள் உறுதியுடன் வழங்கப்படவேண்டும் என்று மாநாட்டில் பேசியவர்கள் வலியுறுத்தினர்.

எல்லா நாடுகளிலும் மதச்சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்று இம் மாநாட்டில் பேசிய அஸ்மா ஜெஹாங்கீர், மதத்தின் பெயரால் நடைபெறும் படுகொலைகளால் பல நாடுகளில் சட்டம், ஒழுங்கு சீர்கெடுவதைச் சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் தொடர்பான பலவேறு அமைப்புக்கள் ஒரணியில் திரண்டு இம் மாநாட்டை நடத்துகின்றன. (து)



கன்னியாகுமரியில் சுனாமி தாக்குதலுக்குப் பின்னர் கடந்தசில நாட்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் காலை உதயம் பார்க்க கன்னியாகுமரியில் கூடிய சுற்றுலாப் பயணிகள்.

# கவனிப்பார் யாரும் இல்லாது சுனாமியால் அழிந்த கிராமம்

(இந்தோனேசியா)

சுனாமி தாக்கி மூன்று வாரங்களுக்கு மேலாகியும் இந்தோனேசிய கடற்கரைகளில் இன்னும் பிணங்கள் ஒதுங்கிய வண்ணமே இருக்கின்றன.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் சுனாமி தாக்கியதில் இதுவரை ஒரு லட்சத்து 16 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை இதோடு நிற்கவில்லை. பிணங்கள் இன்னும் கரை ஒதுங்கிக்கொண்டிருக்கின்றன. பெருந்து, அழுகிய பிணங்களை நாய்கள் குதறும் காட்சிகளைப் பல இடங்களில் காணமுடிகிறது.

பாண்டா அசேவில் முக்கிய இடங்களில் மட்டுமே மீட்புப்பணியும், நிவாரணப் பணிகளும் நடக்கின்றன. இவ்விடத்திலிருந்து பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள லோக்நகா என்ற கிராமத்தைக் கண்டுகொள்வார் யாருமில்லை. இங்கு வசித்த 15ஆயிரம் மக்களில், இனறு பெரும்பான்மையோர் சுனாமிக்குப் பலியாகிவிட்டனர்.

மீன்படித்தொழிலில் ஈடுபட்டு வந்த இம் மக்கள், உடைந்த பாலத்தின் மீது வெறித்த பார்வையுடன் அமர்ந்துள்ளனர். அவர்களின் உறவினர்களும், நண்பர்களும், உணவுகளைக் கொடுத்து உதவி வருகின்றனர். (து)



சிறுவர்கள் இங்கே சேறு மிதிப்பது சிற்றுண்டிக்காகத்தான்... இந்தோனேசியா பண்டா ஆச்லம்பயா பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகள் ஆஸ்திரேலிய இராணுவ ஹெலிகொப்டர் போடும் உணவுப் பொருட்களை வாங்க வயல்வெளி சகதியில் ஏங்கி நிற்கின்றனர்.

# டினாமென் சதுக்க படுகொலையை எதிர்த்த சீன முன்னாள் பிரதமர் ஜாவோ ஜியாங் மரணம்

(பீஜிங்)

சீனாவின் பொருளாதாரச் சீர்திருத்தத்துக்கு அடித்தளம் அமைத்தவரும், டினாமென் சதுக்கப் படுகொலையை எதிர்த்ததால் பதவியை இழந்தவருமான



முன்னாள் சீனப் பிரதமர் ஜாவோ ஜியாங நேற்றுமுன்தினம் மரணமடைந்தார். அவருக்கு வயது 85.

சீனாவின் முன்னாள் பிரதமர் ஜாவோ ஜியாங் கடந்த 1980இல் பிரதமராக பதவியேற்றார். அதற்குமுன், சீனாவின் மிகப்பெரிய மாகாணமான சிசுவான் மாகாணத்தை நிர்வாகம் செய்தார். இப்பொறுப்பை அவர் ஏற்கும் முன், இம் மாகாணத்தின் பொருளாதாரநிலை மிகவும் சீர்குலைந்திருந்தது.

தனது பொருளாதார சீர்திருத்த நடவடிக்கை மூலம், தொழில், மற்றும் விவசாய வளமிக்க மாகாணமாக இதை மாற்றினார். இதனால் ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டெங் ஜியாவோபங்கின் மனதில் இடம்பிடித்தார்.

1977இல் கம்யூனிட்கட்சி பொலீடபரோவில் ஜாவோ சேர்க்கப்பட்டார். 1979இல் ஆறு மாதங்கள் துணைப் பிரதமராகப் பதவி வகித்தார். 1980இல் பிரதமராக நியமிக்கப்படடார். கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பதவியேற்றார்.

வெளிநாட்டுச் சந்தைகளுக்கு சீனா தனது கதவைத் திறக்காமல் இருந்த நிலையை ஜாவோ மாற்றினார். சந்தை சீர்திருத்தம் செய்தார். வெளிநாட்டு முதலீடுகளை அனுமதித்தார். அதன் காரணமாக, சீனாவின் பொருளாதாரநிலை தற்போது உயர்ந்துகொண்டிருக்கிறது.

ஒன்பது ஆண்டுகள் பதவியிலிருந்த அவருக்கு, 1989இல் சரிவு ஏற்பட்டது. கடந்த 1989 மே மாதம் டினாமென் சதுக்கத்தில் ஜனநாயகம் கோரி போராட்டம் நடத்திய மாணவர்களை இராணுவத்தைவிட்டு கம்யூனிஸ்ட் ஆட்சி நசுக்கியது. இராணுவ டாங்குகளை ஏற்றி நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொன்றது.

ஜாவோ இதை ஆதரிக்கவிலலை.

இச்சம்பவம் நடப்பதற்கு முதல்நாள் டினாமென் சதுக்கம் சென்ற ஜாவோ, போராட்டத்தைக் கைவிட்டு விடும்படி மாணவர்களிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். ஜாவோவின் இந்த இரக்கக் குணமே அவருடைய பதவி இழப்புக்குக் காரணமானது.

பிரதமர் பதவியிலிருந்தும், கட்சிப் பதவியிலிருந்தும் அவர் நீக்கப்பட்டார். கட்சியல் பிளவு ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. அவருக்குப் பதிலாக, ஷாங் காய் கவர்னராக இருந்த ஜியாங் ஜெமின பிரதமராக்கப்பட்டார்.

பதவியிலருந்து நீக்கப்பட்டதும், வீட்டுக் காவலில் ஜாவோ வைக்கப்படடார். 1989முதல் 15 ஆண்டுகளாக வீட்டுககாவலில் இருந்த அவருக்கு உடல் நலம் பாதித்தது. மூச்சுக்குழாய் மற்றும் இருதய ரத்த ஓட்டத்திலும் பிரச்சினை ஏற்பட்டது.

சமீபத்தில் முழு கோமா நிலைக்குச் சென்றார். அவருக்கு அளிக்கபபட்ட தீவிர சிகிச்சைகள் பலனளிக்காமல் நேற்றுமுன்தினம் அதிகாலை அவரது உயிர் பிரிந்தது. (து)

# தாய்லாந்து தலைநகரில் சுரங்க ரயில் விபத்து

தாய்லாந்தில் சுரங்க ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டதில் 200 பேர் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில சாலைப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கடந்த யூலை மாதம் சுரங்க ரயில் போக்குவரத்து தொடக்கப்பட்டது. பயணிகளை அதிகம் கவர்வதற்காக கடந்த 7ஆம் திகதி சுரங்க ரயில் கட்டணங்கள் குறைக்கப்பட்டன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை சுரங்கப் பாதையில் நினறுகொண்டிருந்த ஒரு ரயில்மீது பின்னால் வந்த மற்றொரு ரயில் பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் 200பேர் படுகாயமடைந்தனர். 20பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

காயமடைந்தவர்கள் பாங்கொக்கில் பல்வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொம்பியூட்டர் கோளாறு காரணமாக ரயில் போக்குவரத்தில் குளறுபடி ஏற்பட்டு இந்த விபத்து நடந்ததாகக் கூறபபடுகிறது. (து)



நாகையில் சுனாமிப் பேரலையால் சேதமுற்ற ரயில் தண்டவாளம் சீரமைக்கப்பட்டு சோதனை ஓட்டம் ஓடுவதைப் படத்தில் காணலாம்.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை - குறள்

வலம்புரி

# தலைவரின் அழைப்பு புத்திஜீவிகளுக்குச் சந்தர்ப்பம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீளக்கட்டியெழுப்ப முன்வருமாறு தலைவர் வே.பிரபாகரன் தமிழ்ப் புத்திஜீவிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலம் உணர்ந்து தலைவரினால் விடுக்கப்பட்ட இவ் அழைப்பானது தமிழர் தாயகத்திலும், தாயகத்திற்கு வெளியிலும் வாழ்கின்ற புத்திஜீவிகள் தாம் பிறந்த மண்ணுக்குச் சேவையாற்றுவதற்கான அரியதோர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தம்மை ஈன்றெடுத்த தமிழ் அன்னைக்கும், அறிவூட்டி அரவணைத்த தாய் மண்ணுக்கும் தங்களின் அறிவுத்திறனை அர்ப்பணிப்புச் செய்வதற்கு புத்திஜீவிகள் பலர் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கலாம்.

அவ்வாறு எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு, அத்தகையதோர் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதை தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் சுட்டிக்காட்டி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருக்கக்கூடிய தமிழ்ப் புத்திஜீவிகளுக்கு அழைப்புவிட்டுள்ளார்.

"என்னவளம் இல்லை எங்கள் ஈழத் திருநாட்டில்" என்று மார்தட்டி பெருமை பேசக்கூடியவர்கள் நாம். நம் மண்ணின் மைந்தர்கள் பலர் வெளிநாடுகளில் விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறையில் மிகச் சிறந்த வல்லுநர்களாகத் திகழ்கின்றனர்.

வெளிநாடுகளின் நகரவாக்கம், கட்டடவாக்கம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் தமிழர்களின் "மூளை" பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ளது. ஈழத் தமிழர்களின் அறிவியல்நுட்பத்தைக் கண்டு பிரமித்த வெளிநாட்டவர்கள் அவர்களுக்குத் தமது நாட்டில் சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்து, அவர்களை தமது நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்கின்றது.

ஈழத்தமிழன் தனது தாயகத்தில் மட்டுமே வாழவேண்டும் என்பதில்லை. அவன் எங்கும் வாழலாம். ஆனால் அவன் தமிழனாக வாழவேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுவதாகும். அவ்வகையில், தமிழன் எங்குவாழ்ந்தாலும் தன் உடன்பிறப்பு அனுபவிக்கும் துன்பங்கண்டு துடிக்கவேண்டும். அந்தத் துடிப்பை சுனாமி ஏற்படுத்திய அழிவின் போது நாம் நேரில் கண்டுகொண்டோம்.

ஆம், வெளிநாட்டில் வாழ்கின்ற நம் உறவுகள் சுனாமி ஏற்படுத்திய அழிவைக்கண்டு துடித்தனர். தம் தாய்மண்ணில் வாழ்கின்ற சகோதரர்களின் துயர்துடைக்கத் தாமாகவே முன்வந்து தாராள உதவிகளைச் செய்தனர்.

இவை வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் நடந்தமை கண்டு தமிழ் அன்னை அன்புக் கண்ணீர் சொரிகின்றாள். என் தமிழ்ப் பிள்ளைகள் என் இனத்துவத்தை அதன் சிறப்பை பாதுகாத்துவிட்டார்கள். பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் என்ற மகுட வாசகத்தை வானுயர்த்திவிட்டார்கள் என இறும்பூதெய்துகின்றாள்.

இத்தகையதோர் சூழ்நிலையில் நாம் எங்கிருந்தாலும் தமிழர்கள், எங்கள் தாயகம் தமிழீழம் என்ற உணர்வோடு தமிழர் தாயகத்தை கட்டியெழுப்ப முன்வாருங்கள் என்ற தலைவரின் அழைப்பு உலகின் மூலைமுடுக்கு எங்கிலும் வாழும் ஈழத் தமிழ்மக்களின் காதுகளில் நிச்சயம் ஒலிக்கும்.

தமிழ்ப் புத்திஜீவிகள் தம் கனவுகளில் உதித்த தமிழீழத்தை இந்திரபிரஸ்தம்போல் நிர்மாணிக்க நிச்சயம் தாயகம் வருவார்கள். தலைவரின் வழியில் தம்பணி செய்வார்கள்.

# சேதமடைந்த கடற்கலங்களுக்குப் பதிலாக புதிய கடற் கலங்களைப் பெற்றுத் தரவேண்டும்

## தமிழ் கூட்டமைப்பினரிடம் மாதகல் மீனவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் வடபகுதியைத் தாக்கிய சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாதகல் பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது குறித்து வலி.தென்மேற்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சுனாமி எனும் கோளால் இலங்கையின் கரையோரப் பிரதேசததின் பெரும்பகுதி பாதிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இதில் வடக்கு-கிழக்கு பகுதிகள மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

மாதகலில் உள்ள புனித தோமையார் கடற்றொழிலாளர் கூ.சங்கம், லூர்துமேரிச் கடற்றொழிலாளர் கூ.சங்கம், சூசையப்பர் கடற்றொழிலாளர் கூ.சங்கம், ராஜராஜேஸ்வரி கடற்றொழிலாளர் கூ.சங்கம், உதையதாரகை கடற்றொழிலாளர் கூ.சங்கம், துறைமுக விநாயகர் கடற்றொழிலாளர் கூ.சங்கம், மாரிசன் கூடல் குசுமன்துறை கடற்றொழிலாளர் கூ.சங்கம், போயிட்டி, இளவாலை கடற்றொழிலாளர் கூ.சங்கம் ஆகிய எட்டுச் சங்கங்களிற்கும் உட்பட்ட மீனவர்களுக்கு உரித்தான வளளம், வலை, வெளி இணை இயந்திரம் உட்பட பல்வேறுபட்ட கடற்றொழில் உபகரணங்களும் முற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளன.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததாலும், இக்கடற்றொழிலாளாகள் அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே வாழ்ந்ததாலும் அதிர்ஷடவசமாக உயிர் இழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை.

ஆனால், கடற்றொழிலை நம்பி இருக்கும் இம் மக்களின் உபகரணங்கள் யாவும் அழிந்தும் கூட எமக்கு எந்தவித நிவாரண புனர்வாழ்வு உதவியும் வழங்கப்படவில்லை. இவ்விடயங்கள் வலி.தென்மேற்கு சமாசத்தால் பாராளுமன்ற உறுப்பினர்களான க.சுரேஸ்பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. உடனடியாகவே மாதகலுக்கு வந்த இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் சேதமடைந்த கடல் தொழில் உபகரணங்களையும் பாதிககப்பட்ட மாதகல் பிரதேச மக்களையும் பார்வையிட்டதுடன் கிராமசேவகர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோருடன் பேசி இப்பிரதேச கடற்றொழில் சார்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்தனர்.

வலி. தென்மேற்கு கடல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின சமாசம் சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோருக்கு தமது நன்றியைத் தெரிவிப்பதுடன் சேதமடைநத தமது உபகரணங்களிற்குப் பதிலீடாக புதிய உபகரணங்களைப் பெற்றுத் தருமாறு அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ப)

# அமெ.படைகளின் நடவடிக்கை குறித்து நன்கு கலந்துரையாடப்பட வேண்டும்

## 'அவலுக்' இதழுக்கு நட்வர்சிங் பேட்டி

(கொழும்பு)

அமெரிக்கப் படையினர் இலங்கையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து நன்கு கலந்துரையாடப்படல் வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது. 'அவலுக்' இதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெருமளவிலான அமெரிக்கப்படைகள் இலங்கையில் நிலைகொண்டிருப்பது பற்றி இந்தியா கவலையடைந்துள்ளதாக கேட்கப்பட்ட வினா ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில்,

இலங்கையில் ஏற்பட்டுள்ள அழிவுகளைப் பார்க்கையில் இலங்கைக்குப் பெருமளவிலான உதவிகள் தேவைப்படுகின்றன. பெருமளவிலான நிவாரணப் பொருட்களை இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளது. இதே உதவியையே அமெரிக்காவும் வழங்க முன்வந்தமை வரவேற்கத்தக்கது.

உண்மையில் இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேணடியது அவசியம். ஆயினும் தேவைப்படும் அமெரிகாவின ஆதரவின் அளவு தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடபபடல் வேண்டும் எனத்தெரிவித்த அவர், இதனை யாரும் தவறாக விளங்கிக் கொள்ளமாட்டார்கள் எனத் தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார். (ற-6)

# கேணல் கிட்டுவின் 12 ஆம்ஆண்டு நினைவு நிகழ்வு சுவிற்சர்லாந்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது

தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 12வது நினைவு எழுச்சி விழா சுவிற்சர்லாந்தின் தலைநகரான பேர்ண் மாநிலத்தல் அமைந்துள்ள மப்மொண்டோ மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த கடற்புலிகளின் முல்லை மாவட்ட தளபதி த.விநாயகம அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைததார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையின் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் திருமதி மங்கையர்க்கரசி சண்முகதாசன் ஈகச்சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தளபதி கேணல் கிட்டு உட்படப் பத்து வேங்கைகளுக்கும் போராட்டத்தில் தம்முயிரை ஈகம் செய்த மாவீரர்களுக்கும் ஆழிப்பேரலையில் பலியான தாயக உறவுகளுககுமான அகவணக்க நிகழ்வு நடைபெற்றது.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த தளபதி கேணல் கிட்டு உட்படப் பத்து வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கு இளையோர் அணிவகுத்துச் சென்று மலர்வணக்கம் செலுத்த மண்டபத்தில் நிறைந்திருந்த மக்கள் உணர்வுபூர்வமாக தமது மலர் வணக்கத்தைச் செலுத்தினர். அடுத்த நிகழ்வாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை கலை பண்பாட்டுக் கழக இசைக் குழுவி[illegible]ரால் எழுச்சிக் கானங்கள் இசைக்கப்பட்டன. மீணடும மீண்டும [illegible] எனும் தலைப்பில் சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்புப் பிரதிநிதி சந்திரகுமார் ரஜீவ் வழங்கிய கவிதை இடம்பெற்றது.

நர்த்தனா கலைக்கூட மாணவிகளினதும் பேர்ண் திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகளினதும் எழுச்சி நடனங்கள் இடம்பெற்றன. தமிழ் இளையோர் அமைப்பினரால் வர்ணப் பூங்கா எனும் சிறுவர்களுக்கான வர்ணந் தீட்டும் நூல் வெளியிடடு வைக்கப்பட்டது. இந்நூலை தமிழ் இளை யோர் அமைபபுப் பொறுப்பாளர் மகிந்தன் வெளியிட கடற்புலி களின் முல்லை மாவட்ட தளபதி த.விநாயகம் பெற்றுக் கொண்டார்.

இந்நூலுக் கான வெளியீட்டுரையை கிருஸ்ணா அம்பலவாணர் நிகழ்த்தினார். 'கடலம்மா' எனும் தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையின் கலை பண்பாட்டுக்கழக கலைஞர்கள் வழங்கிய கவியரங்கத்தைத் தொடர்ந்து ஈழம் போய்ஸ பாசல் கலைஞர்களின் மேற்கத்திய நடனம் இடமபெற்றது. தொடர்ந்து கடற்புலிகளின் முல்லை மாவட்ட தளபதி த.விநாயகம் சிறப்புரை ஆற்றினார். (ற)

# யாழ்.மாவட்டத்தில் 7 பேருக்கு இம்முறை கலாபூஷணம் விருது

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்யும் 2004ஆம்ஆண்டிற்கான கலாபூஷணம் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 7பேர் கலாபூஷணம் விருது பெறவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கந்தையா நடேசு (தெணியாக்), ச. அடைக்கலமுத்து (அமுது), வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்,லட்சுமண ஆச்சாரி கெங்காதரன், சிதம்பர ஐயா சிதம்பரநாதக் குருக்கள் , சுப்பர் துரைசிங்கம் மற்றும் அனவரத விநாயகமூர்த்தி ஆகிய ஏழு பேருமே இம்முறை கலாபூஷணம் விருது பெறவுள்ளீனர். (ற-19)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று அங்கு காட்டுமிருகங்கள் எலும்பிலிருந்து தசையைப் பிய்த்து எடுப்பதைப் பாருங்கள்! போங்கள் ஒரு பறவையாக ஆகுங்கள்... மனிதனாக இருப்பது எவ்வளவு தவறு. காலங்காலமாக நான் போராடியதெல்லாம் இப்படிப் புலனின்பங்களில் உழல்கின்ற ஒரு மனிதன் ஆவதற்குத்தான் என்றால் என் வாழ்க்கை வீணே.**

**சுவாமி விவேகானந்தர்**

# நோர்வே அமைச்சர்கள் குழு நாளை இலங்கை வருகிறது

## தலைவர் பிரபா — பீற்றர்ஸன் முக்கிய சந்திப்பு

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கில்ட் எஸ்.ஜோன்ஸன் ஆகியோர் தலைமையிலான பிரதிநிதிகள் நாளை இலங்கை வரவுள்ளனர்

இலங்கைவரும் நோர்வேக் குழுவினர் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பர்.

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்களை அறிவதுடன் மக்களின் தேவைகுறித்து ஆராய்வதற்காகவே நோர்வேப் பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள்ளதாக நோர்வேத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நோர்வே அரசாங்கம் 183 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. அந்த உதவித் தொகையில் இலங்கைக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வரவுள்ள நோர்வேப் பிரதிநிதிகள் குழுவில் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கசன் மற்றும் இலங்கைக்கான நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் ஆகியோரும் அடங்குகின்றனர்.

இதேவேளை நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கவனம் செலுத்துவார்களா என்பது குறித்து அவர்கள் இலங்கை வந்த பின்னரே அறியமுடியும் என்று அரச சமாதானச் செயற்பாடுகளின் இணைப்புச் செயலகத்தின் இணைப்பாளர் ஜோன் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, இலங்கை வரும் நோர்வே உயர்மட்டக் குழுவினர் வன்னிக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்களைப் பார்வையிடுவதுடன், அதன் புனர்நிர்மாணம் மீள்கட்டமைப்புக் குறித்து புலிகளின் தலைமையோடு ஆராய்வர் என்று நம்பப்படுகிறது.

இதன்போது விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நோர்வேத் தரப்பினர் சந்தித்து சுனாமி அனர்த்த பாதிப்பு மீள் கட்டுமானம் குறித்தும், சமாதான முயற்சியின் எதிர்காலம் குறித்தும் ஆராய்வர் என்றும் நம்பப்படுகிறது. (இ-04)

### தமிழ்ச்செல்வன் கூட்டமைப்பு சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (ச)

### சண்டேலீடர் ஆசிரியருக்கு பிடிவிறாந்து உத்தரவு

'சண்டேலீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ரெலிக்கொம் தலைவர் திலங்க சுமதிபால தாக்கல்செய்த மனுமீதான விசாரணைக்கு நீதிமன்றுக்கு ஆஜராகாததையடுத்தே அவர்மீது கொழும்பு நீதிவான் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.(இ-15)

# கிழக்கில்..

அவர்களின் கூடாரங்களுக்குள் மழைநீர் புகுந்துள்ளதால் அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடற்கொந்தளிப்பினால் இருப்பிடங்களை இழந்து பொது இடங்களில் தங்கியுள்ள 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொடர்ச்சியாகப் பெய்துவருகின்ற மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மைதானங்களிலும், தாழ்ந்த பிரதேசங்களிலும் கூடாரங்கள் அமைத்து தற்போது வசித்து வரும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுனாமி ஆழ் கடல் அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்தில் மழையினால் ஏற்பட்ட மூன்றாவது வெள்ளப் பாதிப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-04)

# அரச ஊழியரின் சம்பளம் நாளை வழங்கப்படும்

## திறைசேரி அறிவிப்பு

அரச ஊழியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளத்தை நாளை 20 ஆம் திகதி வழங்குமாறு திறைசேரி அறிவித்துள்ளது.

முன்னர் 25 ஆம் திகதி சம்பளத்தை வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை அரச விடுமுறை தினம் என்பதால் அதனை முன்கூட்டியே வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை திறைசேரி நடவடிக்கை பணிப்பாளர் நாயகத்தினால் சகல அமைச்சின் செயலாளர்களுக்கும், திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(இ-8)

# கனடா பிரதமர் நேற்று அம்பாறைக்கு விஜயம்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்துக்கு கனடாப் பிரதமர் நேற்று விஜயம் செய்தார்.

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்களையும் சந்தித்து அவர் கலந்துரையாடினார்.

இதேவேளை மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கடற்படையினரைச் சந்தித்து தற்போதைய நிலைமை குறித்து அவர் ஆராய்ந்ததுடன் அவர்களின் மீட்புப்பணிகளையும் பார்வையிட்டார்.(இ-8)

# காங்கேசன்துறை துறைமுகத்தை நெதர்லாந்து அரசாங்கம் புனரமைக்க இணக்கம்

(கொழும்பு)

சுனாமியால் சேதமடைந்த காலி மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்கள் நெதர்லாந்து அரசின் உதவியுடன் புனரமைக்கப் படவுள்ளன. இதற்கான திட்ட வரைபு அமைச்சர் மங்கள சமரவீரவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலித்துறைமுகப் புனரமைப்புக்கு ஆயிரத்து 740 மில்லியன் ரூபாவும், காங்கேசன் துறைமுகத்திற்கு இரண்டாயிரத்து 300 மில்லியன் ரூபாவும் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி துறைமுகங்களை புனரமைக்க உதவுமாறு அமைச்சர் மங்கள சமரவீர நெதர்லாந்து அரசிடம் விடுத்த வேண்டுகோளை நெதர்லாந்து அரசாங்கம் உடனடியாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி காலித்துறைமுகத்தினுள் புனரமைப்பிற்கான சீமெந்துடன் கப்பலொன்று கடந்த வெள்ளியன்று வந்தடைந்துள்ளது. (இ-06)

# மீட்புபணிக்கு 7 மின்...

5 உழவு இயந்திரங்கள், 25 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 8 மின்பிறப்பாக்கிகள், 10 இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் என்பன அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் மீட்புப்பணிகளை மேற்கொள்ள வாகனங்கள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கும் மீட்புப்பணி மேற்கொள்ள மின் பிறப்பாக்கிகள், வாகனங்கள் என்பனவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின்பேரில் புனர்வாழ்வு அமைச்சு மீட்புப்பணிக்கான இப்பொருட்களை அனுப்பிவைத்துள்ளது. (இ-08)

# பொருளாதார உதவிகளின் மூலம்...

கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சர்வதேச சமூகப் பிரதிநிதிகளிடம் இலங்கை அரசின் கபட நடவடிக்கைகளை தெளிவுபடுத்தியுள்ளோம். ஆழிப்பேரலை அனர்தத்தை அடுத்து இலங்கை அரசிற்கு குவிந்துவரும் சர்வதேச பொருளாதார உதவிகளை அரசாங்கம் போர்முனைப்புடன் இராணுவக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கே பயன்படுத்துகிறது.

இதன்மூலம் மீண்டும் தமிழர் தாயகப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தொடங்குவதற்கு அவசியமான கட்டமைப்புக்களை உருவாக்குவதிலும், பலப்படுத்துவதிலும் முனைப்புடன் அரசு ஈடுபடுவதுடன் சர்வதேச பொருளாதார உதவிகளையும் அதற்கே பயன்படுத்துகிறது.

அதனடிப்படையிலேயே அரசாங்கம் ஆயுதக் கொள்வனவு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது என்று நேற்றைய சந்திப்பில் சர்வதேச சமூகப் பிரதிநிதிகளிடம் தாம் விளக்கமாக தெளிவுபடுத்தியதாக தமிழ்ச்செல்வன் கூறினார்.

மேலும் சர்வதேச சமூகத்தின் மனிதாபிமான உதவிகள் தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்றும், அவ் உதவிகள் தமிழர் தாயகப் பகுதிக்கு நேரடியாக வழங்கப்படவேண்டுமென்றும் தான் சர்வதேசப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்திக் கூறியதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# ஆட்கொணர்வு மனு...

இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த டுமிந்த ஹெப்பிட்டிபலான, பலாலி இராணுவக் கட்டளைத் தளபதி லயனல் பலகல்ல, கிராம சேவையாளர் ப. சிவசரவணநாதன் ஆகியோர் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கில் காணாமற்போனவரை, அதேகாலத்தில் கைதடி வடக்கு கிராம சேவையாளராக இருந்த சிவசரவணநாதன் இராணுவத்தின் கட்டளைக்கமைய அவர்களிடம் அவரை ஒப்படைத்தார் என்றும், ஆனால் அவரை இராணுவத்தினர் அவரது வீட்டிலுள்ள ஆயுதங்களை எடுப்பதற்காக அழைத்துச்சென்றபோது அவர் தப்பியோடிவிட்டதாகவும் இராணுவத் தரப்பில் பதில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் காணாமற்போனவர் 10.12.96 இல் இராணுவத்தினரின்வசம் இருந்தார் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை என்பது விசாரணையின் முதற்தோற்ற நிலையிலேயே சந்தேகத்திற்கிடமின்றி தெரியவந்ததனால் காணாமற்போனவர் தொடர்பாக பூரண விசாரணைகளை நடத்தி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிவானுக்கு கட்டளையிட்டதுடன், இவ்வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் 7 ஆம் திகதி மனுதாரரை சாவகச்சேரி நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறும் மேல்நீதிமன்ற நீதிபதி கட்டளையிட்டார். (இ-19)














## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஒய்வுபெற்ற அதிபரும் வலம்புரி நாளிதழின் ஆசிரியபீடத்தில் கடமையாற்றுபவரும் பல கவிதை நூல்களின் ஆசிரியருமான

கவிஞர் சு.துரைசிங்கம்

அவர்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் பல விருதுகளைப்பெறவேண்டும் என மயிலிணி முருகனின் பாதம் வணங்கி வாழ்த்துகிறோம்.

சிவசதனம்
59/1 பொற்பதி வீதி
கொக்குவில் கிழக்கு
கொக்குவில் (9234)

வாழ்த்துவோர்
திரு.திருமதி விஜயகுமார்


## வாமன் பொன்விழாச்சபையின் அறிவித்தல்

இன்று நடைபெற இருந்த சண். வாமதேவன் (யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர்) அவர்களின் பொன்விழா நாட்டின் நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விழாத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*குறிப்பு:-* வாமன் அமுதம் நூலிற்கான ஆக்கங்களுக்கு ஒத்துக் கொண்டோர் உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

22.01.2005 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விக்னேஸ்வரா கல்வி நிலைய பழைய மாணவர்களையும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய பழைய மாணவர்களையும் விக்னேஸ்வரா கல்வி நிலையத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வாமன் பொன்விழாச்சபை

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.